


# The Trumpet of the Seventh Angel

# ஏழாம் தூதனின் எக்காளம்

1879-1916 ரீ-பிரிண்ட்ஸ் தமிழாக்கம்

மலர் - 11, இதழ் - 4    ஜூலை - ஆகஸ்ட் 2025



R4841

## “CHRIST IN YOU, THE HOPE OF GLORY”

## “கிறிஸ்துவானவர் உங்களுக்குள் இருப்பதே மகிமையின் நம்பிக்கை”

“ஆதிகாலங்களுக்கும் தலைமுறை தலைமுறைகளுக்கும் மறைவாயிருந்து, இப்பொழுது அவருடைய பரிசுத்தவான்களுக்கு வெளியாக்கப்பட்ட இரகசியமாகிய....... கிறிஸ்துவானவர் மகிமையின் நம்பிக்கையாக உங்களுக்குள் இருப்பதே அந்த இரகசியம். ” கொலோசெயர் 1:25-27

இந்த வாசகம் புதிய ஏற்பாட்டில் அநேக இடங்களில் சற்று மாறுபட்ட விதங்களில் காணப்படுகிறது. அர்ப்பணம் செய்து கொண்ட தேவனுடைய பிள்ளைகள் “கிறிஸ்து இயேசுவில்” என்று பேசப்படுகிறார்கள். கிறிஸ்துவின் சரீரமாகிய சபையாகிய அவர்களுக்கு தேவன் அவரை தலையாக தந்தருளினார். நாம் “கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணபட்டிருக்கிறோம்.” இதை ஆதி காலங்களுக்கு மறைவாயிருந்து இப்பொழுது நமக்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது என்று விளக்குகிறார். அதென்னவெனில் தேவன் உலகத்தாரை கிறிஸ்துவுக்குள் ஒப்புரவாக்கினார். (2கொரிந்தியர் 5:19; கொலோசெயர் 1:26)

அநேக அங்கங்கள் அடங்கியது தான் இந்த கிறிஸ்து. (1கொரி.12:12) கிறிஸ்து என்ற கிரேக்க வார்த்தை எபிரேயு பாஷையில் மேசியா என்று சொல்லப்படுகிறது. இரண்டு மொழிகளிலும் இந்த வார்த்தைக்கு “அபிஷேகம் பண்ணப்பட்டவர்” என்று பொருள். ஆதி காலங்களில் இஸ்ரயேலின் ராஜாக்கள் அபிஷேகம் பண்ணப்பட்டது போல ஆசாரியர்களும் எண்ணெயினால் அபிஷேகம் பண்ணப்பட்டார்கள். மெய்யான ராஜாக்களும் ஆசாரியர்களும் அபிஷேகம் பண்ணப்பட்டதை இந்த சடங்கு அடையாளமாக காண்பிக்கிறது. ஆகையால் மேசியா என்பது அபிஷேகம் பண்ணப்பட்ட இராஜாக்களும் ஆசாரியர்களுமாக இருக்கிறார்கள். அவர்களை தேவன் உலக தோற்றத்திற்கு முன்னே தீர்மானித்திருக்கிறார். அதாவது அவரது ஏற்பாடுகளுக்கு கீழ்ப்படிந்த அனைவரையும் உயர்த்தவும் மற்றவர்களை தாழ்த்தவும் தீர்மானித்திருந்தார்.

மேசியாவை ஆயத்தபடுத்தும் காலம் இந்த சுவிசேஷ யுகமாகும். ஆகையால் முதன் முதலில் மேசியாவின் தலையானவர். பிறகு அவரைத் தொடர்ந்து அப்போஸ்தலர்களும் அதன்பிறகு யுகம் முழுவதும் மற்ற சரீர அங்கங்களும் இருக்கிறார்கள். “தெரிந்து கொள்ளப்பட்டவர்களின்” முழு எண்ணிக்கையும் காணப்பட்டு சோதிக்கப்படும் போது இந்த யுகம் முடிவுக்கு வரும். பிறகு சரீரமானது நிறைவடைந்திருக்கும். மேசியா நிறைவடையும் போது, கிறிஸ்துவும் முழுமையடைந்திருப்பார்.

தேவனுடைய திட்டத்தில் இந்த பகுதி சுபாவ மனிதர்களுக்கு மறைவாயிருக்கிறது. அவர்களால் அதைக் காண இயலாது. தேவனை கனம் பண்ணுகிறவர்களும் அவரது திட்டங்களுக்கு மிகவும் நெருங்கி இருக்கிறவர்கள் மட்டுமே அதைக் காணக்கூடும். அது யூதர்களுக்கும் மறைவாயிருந்தது. இயேசு இந்த மேசியாவின் சரீரத்துக்கு தலையானவர் என்பதையும், அது மானிட சரீரமல்ல ஆவியின் ஜீவி என்பதையும் அறியவில்லை. தேவன் யூதர்களிடமிருந்தும் சகல கோத்திரங்களிலுமிருந்தும் இந்த சரீரத்திற்கான அங்கங்களை எடுத்துக்கொண்டிருக்கிறார்.

### “நீங்கள் பரிசுத்தராலே அபிஷேகம் பெற்று சகலத்தையும் அறிந்திருக்கிறீர்கள்”

இந்த பாடத்தைக் குறித்த பல்வேறு வேத வாக்கியங்களை கவனிக்கும் போது கிறிஸ்து நம்மில் எப்படி பிரதிநிதித்துவப்படுத்தப்படுகிறார் என்பதை நாம் காண்கிறோம். நாம் பரிசுத்த ஆவியை பெற்றிருக்கிற அளவுக்குத்தக்கதாக நாம் அவரது சரீரத்தில் உண்மையுள்ள அங்கங்களாக இருந்து நம்மில் அபிஷேகத்தை பெற்றிருக்கிறோம். அப்போஸ்தலர் கூறுகிறதாவது; “நீங்கள் அவராலே பெற்ற அபிஷேகம் உங்களில் நிலைத்திருக்கிறது.” “நீங்கள் பரிசுத்தராலே அபிஷேகம் பெற்று சகலத்தையம் அறிந்திருக்கிறீர்கள்.” (1 யோவான் 2:27, 20) இது நமக்கு வெளிப்படுத்துவது போல உலகிற்கு வெளிப்படுத்தவில்லை. சுயநலத்திற்கு எதிரான கிறிஸ்துவின் சிந்தையை நாம் பெற்றிருக்கிறோம் என்பதை நாம் அறிவோம். நம்மைக் காட்டிலும் மற்றவர்களிடம் இன்னும் அதிகமதிகமாக புரிந்து கொள்ளலாம். ஒவ்வொரு நல்ல விதையும், நல்ல பழத்தை கொடுக்கும். அது போல நாம் திராட்சைச் செடியில் நிலைத்திருந்தால் அதன்மூலம் சாந்தம், பொறுமை, சகோதர அன்பு, நீடிய பொறுமை, அன்பு போன்ற கனிகளைத் தருவோம்.

கிறிஸ்துவானவர் உங்களுக்குள் இருப்பதே மகிமையின் நம்பிக்கை என்பது இந்த கிறிஸ்துவுக்கு, இந்த அபிஷேகம் பண்ணப்பட்டவருக்கு தேவன் கனம், மகிமை மற்றும் சாகாமையை, தெய்வீக சுபாவத்தை வாக்குத்தத்தம்

பண்ணியிருக்கிறார் என்ற பொருளில் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த அபிஷேகத்தை, கிறிஸ்துவின் ஆவியை உடையவர்கள் மட்டுமே இந்த நம்பிக்கையை சரியானபடி பெற்றிருக்க முடியும். ஏனெனில் நாம் பெற்றிருப்பது சுதந்திரத்தின் வெறும் அதிகாரம் மற்றும் வரப்போகிறதை ருசி பார்த்தலை மாத்திரமே ஆகும். ஆனால் இந்த அழைப்பு நமக்கு இப்பொது அவமானத்தைக் கொடுக்கும். அவர்கள் "பலவித தீமையான மொழிகளையும் உங்கள் பேரில் சொல்லுவார்கள்." அந்த அபிஷேகத்தைப் பெற்ற நம்மேல் சொல்லுவார்கள். "உலகம் அவரை அறியாதபடியினால் நம்மையும் அறியமாட்டார்கள்." (1 யோவான் 3:1) நாம் இப்பொழுது பெற்றிருக்கிற இது ஒரு கசப்பான முன்னனுபவம். ஆனால் இதனுடன் உலகம் தரக்கூடாத ஒரு சந்தோஷம் இணைந்திருக்கிறது.

R4842

## THE ROBE OF CHRIST'S RIGHTEOUSNESS
## கிறிஸ்துவின் நீதியின் வஸ்திரம்

"எவர்களுடைய அக்கிரமங்கள் மன்னிக்கப்பட்டதோ, எவர்களுடைய பாவங்கள் மூடப்பட்டதோ, அவர்கள் பாக்கியவான்கள்." ரோமர் 4:7

கர்த்தரின் உவமையில் (மத்தேயு 22:2-14) குறிப்பிடப்பட்ட "கலியாண வஸ்திரம்" என்பது நீதியின் வஸ்திரத்தைக் குறிக்கிறது. அது பிரதிஷ்டை பண்ணும் போது நமக்குரியதாகிறது. நாம் ஜெனிப்பிக்கப்படும் அந்த கணத்தில், கர்த்தர் நம்மை ஏற்றுக்கொண்ட போது, மணவாட்டி வகுப்பாராகிய கிறிஸ்துவின் சரீரத்தின் சோதித்தரியும் அங்கங்களாக ஆனோம். நாம் கலியாண வஸ்திரத்தினால் மூடப்பட்டோம்.

இந்த "கலியாண வஸ்திரம்" பழைய சிருஷ்டிக்கு கொடுக்கப்படாமல் புது சிருஷ்டிக்கு கொடுக்கப்படுகிறது. அது அபூரண சரீரத்தின் கறைகளை மூடுவதற்காக கொடுக்கப்படுகிறது. தேவன் நமது பலியை ஏற்றுக்கொண்டு, பரிசுத்த ஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்ட கனத்திலிருந்து, இந்த வஸ்திரத்தை அணிந்து கொண்ட புது சிருஷ்டியாக கருதப்படுகிறோம். அதிலிருந்து பழைய சிருஷ்டி தேவ பார்வையில் இல்லாததாகிறது. "பழையவைகள் ஒழிந்து போயின, எல்லாம் புதிதாயின." (2கொரிந்தியர் 5:17) ஆனால் இந்த புது சிருஷ்டி புது சரீரத்தை பெற்றிருக்க வேண்டும். ஆனால் புது சிருஷ்டியானது பழைய சரீரத்தையும் புதிய சிந்தையாகிய கிறிஸ்துவின் சிந்தையையும் பெற்றிருக்கிறது. நாம் மாம்சத்தின்படி மரித்தவர்களாக கருதப்படுகிறோம் என்பதில் திருப்தியடையாமல், நாம் ஆவியில் ஜீவனுள்ளவர்களாக ஆக்கப்பட்டிருக்கிறோம் என்பதை எண்ணிக்கொள்ள வேண்டும் என்று அப்போஸ்தலர் நமக்கு கூறுகிறார். கிறிஸ்துவின் ஆவி நம்மில் இருந்தால், அது நமது அழியக்கூடிய சரீரத்தை உயிர்ப்பிக்கும். (ரோமர் 8:8-14)

பழைய வாழ்க்கையின் போக்கு மற்றும் பழைய அபூரணங்களின் செல்வாக்கின் கீழாகவும் இருந்த இந்த அழிவுக்குரிய சரீரம் இப்போது புதிய சிந்தையின் கட்டுப்பாட்டின் கீழாக வைக்கப்பட்டிருக்கிறது. புது சிருஷ்டியானது புது சிந்தையை பயன்படுத்தி மாம்சத்தின் விருப்பங்களில் ஜெயங்கொள்ள எதிர்பார்க்கப்படுகிறது. ஒரு தெய்வீக ஜீவியாக உயிர்த்தெழுதலில் எழுப்பப்படுவதற்கு பாத்திரராக எண்ணப்படுவதை மெய்ப்பிக்க, இந்த மாம்ச சரீரத்தில் புது சிருஷ்டியானது எதிர்பார்க்கப்படுகிறது. இந்த அபூரண சரீரத்தில் இருந்து கொண்டு, அவனது அபூரணங்களை மூடுவதற்கு கிறிஸ்துவின் நீதியின் வஸ்திரம் தேவைப்படுகிறது.

### வஸ்திரமானது புது சிந்தையின் பாவங்களை மூடாது

இந்த காரியத்தை படிக்கும் போது, சிலர் நினைப்பது போல, வஸ்திரமானது புது சிருஷ்டியின் பாவங்களை மூடாது என்பதை மனதில் கொள்வது நல்லது. புதிய சிந்தையில் பாவமில்லை என்றும் விழுந்த போன மாம்சத்தில் பூரண நீதி இல்லையென்றும் வேத வாக்கியங்கள் காட்டுகின்றன. புதிய சிந்தையானது தேவனுக்கு உண்மையாயிராதிருந்தால், வஸ்திரமானது அதை மூடாது. புது சிந்தையாக இருப்பது முடிவுக்கு வந்துவிடும். (ஆதாமிடமிருந்து நாம் சுதந்தரித்துக் கொண்ட) மாம்சத்தின் அபூரணங்களை தொடர்ந்து மூடுவதற்கு புது சிருஷ்டியானது தேவனிடத்தில் விசுவாசமாக இருக்க வேண்டும். இல்லையென்றால் இரண்டாம் மரணத்திற்கு தகுதியாகிவிடும். எனவே புது சிருஷ்களானது, புதிய சிந்தையின் கீழாக அபூரண சரீரங்களுடன் கர்த்தருடைய பார்வையில் நிலைநிற்கும்படியாக மணவாட்டியின் வஸ்திரத்தை பெற்றவர்களாக இருப்பார்கள்.

நமது பிரியமான இரட்சகரின் இந்த நீதியானது நமக்கு சாட்டப்பட்டதாக குறிப்பிடப்படுகிறது. பிறகு மகிமையான எம்பிராய்டரி வேலையை செய்வது நமக்குரியதாகும். அதன் முத்திரை முன்னரே வஸ்திரத்தில் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதாவது நாம் எப்படி அதன்மீது ஆவியின் கனிகளுக்காக கிரியை நடப்பிக்க வேண்டும் என்று வழிகாட்டுதல்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

# QUESTIONS OF INTEREST
# ஆர்வமுள்ள கேள்விகள்

### சுவிசேஷத்தின் கிருபை படிப்படியாக முடிதல்

**கேள்வி:** "சிறு மந்தையை" இறுதியாக அமைக்கிறவர்கள் அனைவரும் 1881 அக்டோபருக்கு முன் நீதிமானாக்கப்பட்ட நிலைமையில் இருக்க வேண்டியது அவசியம் என்ற யூத யுகத்தின் இணைகள் மூலமாக வேதவாக்கியங்கள் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ போதிப்பதாக நீங்கள் புரிந்து கொண்டீர்களா?

**பதில்:** இல்லை, நாங்கள் அதை அப்படியாக புரிந்து கொள்ளவில்லை.

**கேள்வி:** "சிறு மந்தையில்" இருப்பவர்கள் அனைவரும் 1881 அக்டோபரிலோ அல்லது அதற்கு முன்னரோ அவர்கள் அர்ப்பணம் செய்திருப்பது அவசியமா?

**பதில்:** இல்லை, நாங்கள் அதை அப்படியாக புரிந்து கொள்ளவில்லை. வேதாகம பாடங்கள் தொகுதி II இல் யூத யுகத்திற்கும் கிறிஸ்தவ யுகத்திற்கும் இணைகளை காண்பிக்கும் போது நான்கு தேதிகள் முக்கியப்படுத்தி காண்பிக்கப்படுகிறது. (1) அக்டோபர் 1874; (2) ஏப்ரல் 1878; (3) அக்டோபர் 1881 மற்றும் (4) அக்டோபர் 1914. இந்த நான்கு தேதிகளும் யூத யுகத்தின் நான்கு நிகழ்வுகளுக்கு இணையாக இருக்கிறது. அதாவது: (1) நமது கர்த்தரின் ஊழியத்தின் ஆரம்பம்; யூத கோத்திரத்துக்கு சோதனை அல்லது அறுவடை காலம், அக்டோபர் 29; (2) நமது கர்த்தரின் ஊழியத்தின் முடிவு, அவரது சிலுவை மரணம் மற்றும் யூத கோத்திரம் ஒரு தேசமாக நிராகரிக்கப்படுதல், ஏப்ரல் 33; (தொகுதி 2இல், அதிகாரம் 7); (3) எழுபது வாரங்களின் முடிவு; (தானியேல் 9:24-26) யூதர்களின் மேல் கிருபையின் முடிவு காலம், அக்டோபர் 36; அதன் பிறகு சுவிசேஷத்தின் சலுகை புறஜாதிகளுக்கு சென்றது, கொர்நேலியு முதலில் கிறிஸ்தவனாக மாறியது; (4) இஸ்ரேல் ராஜ்யத்தின் மேல் வந்த சோதனையின் முடிவும் அழிவும், அக்டோபர் 69.

யூத யுகம் மற்றும் சுவிசேஷ யுகத்தின் இணைகள் அனைத்தும் அவ்வப்போது பேரளவான முறைமைகளுக்கு உரியது என்பது தெளிவாக கவனிக்கப்பட வேண்டும். இதை மனதில் வைத்தால், இந்த இணைகளை தேவனுடைய ஜனங்களை சுவிசேஷ சபையிலிருந்தோ அல்லது இப்பொழுதிருக்கிற பாபிலோனிலிருந்தோ கூட்டிச் சேர்ப்பதுடன் பொருத்துவதை தடுக்கும்.

இந்த இணைகளை கவனித்து, 1874ஆம் வருடம் இந்த அறுப்பின் ஆரம்பம் என்பதையும் பரலோகத்தின் நான்கு காற்றுகளிலிருந்தும் "தெரிந்து கொள்ளப்பட்டவர்களை" கூட்டிச் சேர்ப்பது என்பதையும் நாம் காண்கிறோம். 1878 என்பது பாபிலோன் முறையாக நிராகரிக்கப்பட்ட காலம், லவோதிக்கேயன் சபை வாந்தி பண்ணிப்போடப்பட்ட காலம், தேவ கிருபையிலிருந்து "பாபிலோன் விழுந்தது, விழுந்தது" என்று அறிவிக்கப்பட்ட காலம் என்று காண்கிறோம். இந்த இணையின்படி 1881இல் பாபிலோனின் முறைமை நிராகரிக்கப்பட்டாலும், அதில் இருந்தவர்களுக்கு ஒரு குறிப்பிட்ட சலுகை இன்னும் தொடர்ந்தது என்று காணப்படுகிறது. அந்த தேதியிலிருந்து அந்த உறவு எந்த விதத்திலும் பிரயோஜனம் அற்றது என்று புரிந்து கொள்ளுகிறோம். அந்த காலத்திலிருந்து கர்த்தரின் கிருபையும் சத்திய உதவியும் சேர்ந்துதான் துன்பத்துடன் மட்டுமே அவர்களை விடுவிக்க முடியும். இந்த இணைகளுக்கு இசைவாக அக்டோபர் 1914இல் பாபிலோன் முடிவுக்கு வரும். "ஒரு பெரிய ஏந்திரக்கல்லை சமுத்திரத்திலே எறிந்தது போல" அந்த முறைமை முற்றிலுமாக அழிக்கப்படும்.

மாம்சீக இஸ்ரயேலின் மேல் இருந்த கிருபை முடிவடைவது என்பது இந்த சுவிசேஷ யுகத்தின் விசேஷித்த கிருபை முடிவடைவதை குறிக்கிறது என்று அனுமானிப்பது நியாயமானதாக இருக்கும் என்றும் ஒப்புக்கொள்கிறோம். அதாவது பரம அழைப்புக்கான அழைப்பு முடிவடைகிறது. ராஜ்ய கனத்திற்காக பொதுவான அல்லது திறந்த "அழைப்பு" அக்டோபர் 1881இல் நிறுத்தப்பட்டது. எனினும் வேதாகம பாடங்களில் காண்பிக்கப்பட்டது போல, அழைப்பு முடிவடைதற்கும் "கதவு" அடைக்கப்படுவதற்கும் உள்ள வித்தியாசத்தை விளக்கியுள்ளோம். இராஜ்ய வகுப்பாருக்கான கதவு இன்னும் மூடப்படவில்லை என்று நம்புகிறோம். முன்னரே அழைப்பை ஏற்றுக்கொண்டு, அதன் சலுகைகளையும் சுய பலியின் சந்தர்ப்பங்களையும் பயன்படுத்த தவறியவர்களை வெளியேற்றி விட்டு, வெளிப்படுத்துதல் 3:11க்கு இசைவாக மற்றவர்களை அவர்களது கிரீடத்திற்காக அனுமதிக்கவும் கதவானது கொஞ்ச காலம் கொஞ்சம் திறந்திருக்கிறது. ஆகையால் 1881லிருந்து கர்த்தருடைய ஊழியத்தில் பலியின் ஊழியத்திற்கான கதவு மூடப்படும் வரை, முன்னரே தெய்வீக கிருபையிலும், தேவனுடன் உடன்படிக்கையின் உறவுக்குள்ளும் இருக்கிற அனைவருக்கும் பிரித்தெடுத்தலின் (சலித்தலின்) காலமாக இருக்கிறது. "கதவு" மூலமாக "விருந்துக்குள்" சென்றவர்கள் அழைக்கப்பட்ட அனைவரையும் குறிக்கிறார்கள். (அதன்பிறகு நிராகரிக்கபட்டு வெளியேற்றப்பட்டவர்களைத் தவிர) அதன் பிறகு வெளியேற்றப்பட்டவர்களின் இடங்கள் வேறு சிலரால் நிரப்பப்பட வேண்டும். அவர்கள் முன்னரே அழைக்கப்பட்டவர்களிலோ அர்ப்பணம் செய்தவர்களிலோ இல்லை. இது உங்கள் கேள்விக்கு சரியான பதிலைத் தருகிறது என்று நம்புகிறோம். திறந்த அழைப்பு நிறுத்தப்பட்ட பிறகும், கதவு மூடப்படுதற்கும் முன்பும் பதினோராம் மணி நேரத்தில் திராட்சைத் தோட்டத்தில் வேலைக்காகவும் உண்மையுள்ளவர்களுக்கான வெகுமதிக்காகவும் முன்னரே அர்ப்பணம் செய்யாதவர்கள் அனுமதிக்கப்படுவார்கள்.

இந்த அறுவடை காலத்தில் கூட்டிச் சேர்க்கப்படுதலைப் பற்றி பேசும் போது நமது கர்த்தர் குறிப்பிடுவதை தெளிவாக நாம் நினைவுப்படுத்த வேண்டும். அதாவது, வயலில் (உலகத்தில்) இருந்தவர்கள், இதற்கு முன்பு சத்தியத்தினால் நீதிமானாக்கப்படாமலோ, பரிசுத்தமாக்கப்படாமலோ இருந்த ஒரு வகுப்பாரை குறிப்பிடுகிறார்கள். வேதாகம பாடங்கள், தொகுதி III அதிகாரம் 6ஐப் பார்க்கவும்.

### வஸ்திரமானது புது சிருஷ்டிக்கு கொடுக்கப்படுகிறது

**கேள்வி:** புது சிருஷ்டியின் சரீரம் பாவம் செய்யக்கூடுமா?

**பதில்:** புது சிருஷ்டிக்கான சரியான சரீரம் முதலாம் உயிர்த்தெழுதலின் ஆவிக்குரிய சரீரமாகும். ஆனால் அதை பெறுவதற்கு முன்னதாக அவன் தகுதி சோதனையில் வைக்கப்பட்டு அவனது பழைய சரீரத்திலேயே பயிற்சி

செய்யும்படி கொடுக்கப்படுகிறான். புது சிருஷ்டி பழைய சரீரத்தை பூரணமாக கீழ்ப்படிய வைக்க முடியாது. ஆனால் வார்த்தைகள், செயல்கள் மற்றும் எண்ணங்களை தேவனுடைய பூரண பிரமாணமாகிய அன்பிற்கு இசைவாக கொண்டு வர புது சிருஷ்டியானது தனது முயற்சியில் பலத்தை அபிவிருத்தி செய்யலாம்.

ஜெயங்கொள்ள முடியவில்லை என்றால், "நல்ல போராட்டத்தை" போராடி இரட்சிப்பின் அதிபதியிடம் மையம் வரையிலான தனது விசுவாசத்தை காண்பிக்க வேண்டும்.

மாம்சத்தின அபூரணங்களுக்கு புது சிருஷ்டி சம்பந்தம் இல்லாதிருக்கிறது. இவை எல்லாம் ஆதாமின் பலவீனத்தினால் பரம்பரையாக வந்தவை, மாபெரும் பரிகாரியிடம் வேண்டுதல் செய்யும் போது, இரட்சகரால் மன்னிக்கப்படக் கூடியவை. மாம்சத்தின் ஒவ்வொரு மீறுதலும், மாம்சத்தை சொந்தமாக்கி பயன்படுத்திக் கொண்டிருக்கிற புது சிருஷ்டியின் மேல் சாட்டப்படுகிறது. வருந்துவது, ஜெபம் முதலானவை கடமையாகிறது; புது சிருஷ்டிக்கு ஆசீர்வாதம் கிடைக்கிறது. புது சிருஷ்டியானது எந்த அளவுக்கு தனது மாம்சத்தின் பாவங்களுக்கு அனுதாபம் அல்லது சம்மதம் கொடுக்கிறதோ அந்த அளவுக்கு "அடிகளுக்கு" பாத்திரவானாக இருக்கிறது. இந்த அடிகள் அவனது குணலட்சண அபிவிருத்திக்கு உதவி புரியும். "தகப்பன் சிட்சியாக புத்திரன் உண்டோ?"

கலியாண வஸ்திரம், கிறிஸ்துவின் நீதியின் வஸ்திரம் மாம்சத்தின் அபூரணங்களை மூடுவதற்கு புது சிருஷ்டிக்கு மட்டுமே கொடுக்கப்படுகிறது. ஒரு புது சிருஷ்டியாக அது அவனது நீதியை குறிக்கிறது. அது அவனை அவனது இரட்சகரும் பரிகாரியுமான இயேசுவின் புண்ணியத்தினால் தெய்வீக பார்வையில் பரிசுத்தமுள்ளவனாக, குற்றமற்றவனாக, மாசில்லாதவனாக காண்பிக்கிறது.

### புது சிருஷ்டியும் பாவமும்

**கேள்வி:** புது சிருஷ்டி பாவம் பண்ணக்கூடுமா?

**பதில்:** ஆம்! மற்றும் இல்லை! அப்போஸ்தலர் கூறுவதாவது: "அவன் பாவம் செய்யான். ஏனெனில் அவருடைய வித்து அவனுக்குள் தரித்திருக்கிறது." (1யோவான் 3:9) சொல்லப்போனால் எந்த ஒரு புது சிருஷ்டியும் தேவனுடைய ஆவியை, பரிசுத்த ஆவியை தொடர்ந்து பெற்றிருக்கும் வரை வேண்டுமென்றே பாவம் செய்யமுடியாது. பரிசுத்த ஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்ட ஒருவன் வேண்டுமென்றே பாவம் செய்தால், இதற்கு முன்னதாகவே அவனது பரிசுத்த ஆவியை பிரிந்துவிட்டான் (ஜெனிப்பித்தலின் வித்தை இழந்து விட்டான்) என்பதையும் அதற்கு பதிலாக பாவத்தின் ஆவியை, சத்துருவின் ஆவியை பெற்றிருக்கிறான் என்பதையும் குறிக்கிறது. வேறு வார்த்தையில் சொல்லுவோமானால், தேவனுடைய ஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்ட ஒரு பரிசுத்த மனிதன் தெரிந்தோ, வேண்டும் என்றோ பாவம் செய்யமாட்டான். ஏனெனில் அது பரிசுத்தமில்லாததாகவும் தேவனுக்கு பிரியமில்லாததாகவும் இருக்கிறது என்பதையும் அவன் அறிவான். ஒரு தடவை அவன் பாவத்திற்கு மரித்து மறுபடியும் உயிர்ப்பிக்கப்பட்டால், மறுபடியும் சேற்றில் புரள திரும்பினதைக் குறிக்கும். "இரண்டு தரம் செத்து வேரற்றுப் போன மரத்தைப் போல" இருப்பார்கள். புத்தியற்ற மிருக ஜீவன்களைப் போல கேட்டிலே கெட்டழிந்து போவார்கள்.(யூதா 12; 2 பேதுரு 2:12)

R4849

## THE LOVE REQUIRED OF THE NEW CREATION
## புது சிருஷ்டிக்கு தேவையான அன்பு

" நாம் ஒருவரிடத்தில் ஒருவர் அன்பு கூர்ந்தால் தேவன் நமக்குள் நிலைத்திருக்கிறார்;
அவருடைய அன்பும் நமக்குள் பூரணப்படும்." 1 யோவான் 4:12

மானிட அன்பிற்கும் மிருக அன்பிற்கும் ஒரு பெரும் வித்தியாசம் இருக்கிறது. குடும்ப அங்கங்கள் ஒவ்வொருவரும் ஒருவருக்கொருவர் அன்பு செலுத்துகிறார்கள். அந்த அன்பைக் குறித்துதான் இந்த வசனம் குறிப்பிடுகிறது. கிறிஸ்துவின் சரீர அங்கங்களுக்கு தேவையான அன்பு, கர்த்தருடனான பரஸ்பர உறவினால் வருகிற ஒரு அன்பாகும். இது அவர்களிடம் வாசம் செய்கிற தேவனுடைய ஆவியிடமிருந்து வருகிறது. அது தேவனைப் போன்ற ஒரு அன்பு; அது அவருடைய மனோபாவத்தினால் ஜெனிப்பிக்கப்பட்ட அவருடைய ஆவியை உடையவர்கள் என்று அவர்களை குறியிடுகிறது. கர்த்தருடைய ஜனங்களின் குணலட்சணத்தில் ஏதோ ஒன்று இருக்க வேண்டும். அது எல்லா சந்தர்ப்பங்களிலும், அவர்கள் ஒருவருக்கொருவர் உண்மையான அன்பை பெற்றிருக்கிறார்கள் என்பதை நிரூபிக்க வேண்டும். அப்படியில்லையென்றால் அன்பில்லாமை எல்லார் மேலும் பிரதிபலிக்கும்.

ஒருவருக்கொருவர் அன்பு செலுத்த நாம் கற்றுக் கொண்டதால், தேவனுடைய அன்பு நம்மில் பூரணப்பட்டுக் கொண்டிருக்கிறது. உண்மை, அது கர்த்தர் கட்டளையிடுகிற இரக்கமுள்ள அன்பு. நம்முடைய ஜீவனை ஒருவருக்கொருவர் கொடுக்கக்கூடிய அளவு, கர்த்தர் நம்மை நேசிக்கிறது போல, நாமும் ஒருவருக்கொருவர் அன்பு செலுத்த வேண்டும் என்று கர்த்தர் கூறினார். சில சகோதரர்களை சில சமயங்களிலும், சில சகோதரர்களை எல்லா சமயங்களிலும் நேசிக்கக்கூடாது. ஆனால் எல்லா சகோதரர்களையும் எல்லா சமயங்களிலும் நேசிக்க வேண்டும். தேவன் அவர்களை காண்கிற உயர்ந்த நிலைப்பாட்டை எடுத்துக்கொண்டு நாம் அவர்களது பலவீனங்களையும் அபூரணங்களையும் மன்னித்துவிட வேண்டும். கிறிஸ்துவினிமித்தம் நமது கறைகளை தேவன் மன்னிக்கிறது போல நாமும் ஒருவரையொருவர் மன்னிக்க வேண்டும். தேவன் நம்முடைய மீறுதல்களை மன்னிப்பார் என்று நாம் நம்புகிறது போல நமக்கு மீறுதல் பண்ணுகிறவர்களையும் நாம் மன்னிக்க வேண்டும். இந்த அன்பு நம்மிடத்தில் பூரணம் அடையாவிட்டால் யாரும் தெரிந்துக்கொள்ளப்பட்டவர்கள் வகுப்பில் இருக்க முடியாது. விரைவாகவும் ஏற்ற நேரத்திலும் அவன் பேசவில்லையென்றால் மாம்சத்தின் மேல் முழு கட்டுப்பாட்டை பெற முடியாது. அவன் ராஜ்யத்தின் அங்கமாக ஏற்றுக்கொள்ளப்படுமுன், அவன் நோக்கத்தில் பூரணமடையும் இடத்திற்கு வர வேண்டும்.

அப்போஸ்தலர் பவுல் கூறுகிறதாவது: "அன்பானது

பிறனுக்கு பொல்லாங்கு செய்யாது; ஆதலால் அன்பு நியாயப்பிரமாணத்தின் நிறைவேறுதலாயிருக்கிறது." (ரோமர் 13:10) அப்போஸ்தலரின் மனதில் இருந்த தெய்வீக பிரமாணம் இஸ்ரயேலருக்கு கொடுக்கப்பட்ட பிரமாணம் ஆகும். "நீ உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும் உன் முழு பலத்தோடும் அன்பு கூருவாயாக" மற்றும் "உன்னில் நீ அன்பு கூருவது போல, பிறனிலும் அன்பு கூருவாயாக." (உபாகமம் 6:5; லேவியராகமம் 19:18) தேவனுடைய இந்த பிரமாணத்தை நிறைவேற்றுவதற்கு, முழுமையாக நிறைவு செய்வதற்கு இருதயமானது அன்பினால் நிரம்பியிருப்பது தேவைப்படுகிறது. இந்த பிரமாணத்தை நிறைவேற்றுவதற்கு முழு மனதும் முழு ஆத்துமாவும் மற்றும் முழு பலமும் தேவைப்படுகிறது. "அன்பானது பிறனுக்கு பொல்லாங்கு செய்யாது." எனினும் ஒருவனது இருதய நோக்கம் நல்லதாக இருக்கும் போது, அறியாமையினாலும், மூட நம்பிக்கையினாலும், தவறான புரிந்துகொள்ளுதலினாலும் மாம்சத்தின் அபூரணத்தினால் பொல்லாங்கு செய்யக்கூடும். தர்சுவைச் சேர்ந்த சவுல் அநேகருக்கு பொல்லாங்கு செய்தார். சந்தேகத்திற்கிடமில்லாமல் நல்ல நோக்கத்துடன் நமது சில கத்தோலிக்க நண்பர்களும் புரட்டஸ்டன்ட் நண்பர்களும் மற்றவர்களுக்கு பொல்லாங்கு செய்திருக்கிறார்கள். ஆகையால் அவர்கள் பொல்லாங்கு செய்தார்கள் என்றும் அவர்களிடம் அன்பு இல்லை என்றும் நாம் சொல்ல முடியாது. ஆனால் பிரமாணத்திற்கு தேவைப்படுகிற அளவுக்கு அவர்கள் அன்பை பெற்றிருக்கவில்லை. ஏனெனில் பூரண அன்பு பிறனுக்கு தீங்கு செய்யாது. முழு அறிவுடன் பிறனுக்கு பொல்லாங்கு செய்கிறவனிடத்தில் அன்பு இல்லை.

### யூத பிரமாணத்துக்கு மேலாக செல்லுகிறது

ஆகையால் இந்த வசனத்தின் வார்த்தையில் அழுத்தம் இருக்கிறது. "அன்பானது பிறனுக்கு பொல்லாங்கு செய்யாது. ஆதலால் அன்பு நியாயப்பிரமாணத்தின் நிறைவேறுதலாயிருக்கிறது." பிரமாணமானது தவறான செயல்களையும், தவறான வார்த்தைகளையும் பிறரைப் பற்றிய தவறான உணர்வுகளையும் கட்டுப்படுத்தவே கொடுக்கப்பட்டது. அந்த பிரமாணமானது செய்யக்கூடாத எல்லாவற்றையும் பயமுறுத்தும் நோக்கத்துடன் சொல்லவில்லை. ஏனெனில் அது பொல்லாங்கு செய்யாது. ஆகையால் ஒருவன் பிறனுக்கு பொல்லாங்கு செய்யாமல் தன்னைப் போல் பிறனை நேசித்தால் பத்து கட்டளையின் பிரமாணத்தை நிறைவேற்றுகிறான். ஆகையால் அப்போஸ்தலர் புது சிருஷ்டியின் பிரமாணத்தை அல்ல, யூதர்களின் பிரமாணத்தையே மனதில் கொண்டு இந்த வார்த்தையை கொடுத்தார் என்ற எண்ணத்தை கொடுக்கிறது. தீமையிலிருந்து விலகியிருத்தலும், தன்னைப் போல் பிறனை நேசிப்பதும் மட்டுமே கர்த்தர் புது சிருஷ்டிக்கு கொடுத்த பிரமாணத்தை நிறைவேற்றாது.

ஆனால் நமது கர்த்தர் அந்த பிரமாணத்தை பெரிதாக்கி ஒரு புது பிரமாணத்தை கொடுத்தார். அன்பானது அவரது பின்னடியார்களிடத்தில், அவருடைய சீஷர்களிடத்தில் இருக்க வேண்டும் என்று அவரது வசனத்தில் காண்பிக்கப்பட்டிருக்கிறது. "நான் உங்களில் அன்பாயிருக்கிறது போல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருக்க வேண்டும்." (யோவான் 15:12) இதை செய்வது பிறனுக்கு பொல்லாங்கு செய்யாததைக் காட்டிலும் இன்னும் அதிகமானது. இது ஒருவருக்கொருவர் ஜீவனைக் கொடுக்க வேண்டும் என்பதாக இருக்கும். இது நியாயப்பிரமாணத்தின் தேவையைக் காட்டிலும் இன்னும் மேலானதாக இருக்கிறது. நீ பிறனுடைய நடைபாதையில் உள்ள பனியை சுத்தம் பண்ணிக்கொடு என்று நீதி கூறாது. ஆனால் நீ பிறனுடைய நடைபாதையில் பனியை எறியாதே என்று கூறும். ஆனால் இதைக் காட்டிலும் அதிகமானதை அன்பு கூறுகிறது. நமக்கு கொடுக்கப்பட்டிருக்கிற புதிய பிரமாணம் பலியின் பிரமாணம். கிறிஸ்துவின் சரீரத்தில் இருக்கிற நாம், இயேசு நம்மை நேசித்தது போல, நாம் ஒருவரையொருவர், நமது நன்மையை, நமது சுகங்களை, நமது சலுகைகளை மற்றவர்களின் நம்மைக்காக பலி கொடுக்கிற அளவுக்கு நேசிக்க வேண்டும்.

அன்பு, தயை, இரக்கம், நற்குணம், சாந்தம் போன்ற இந்த புது சிருஷ்டியின் பிரமாணத்திற்கான இணக்கத்தை தனது இருதயத்தில் காணாதவன் எந்த விதத்திலும் கிறிஸ்துவின் உடன்சுதந்தரராக தேவனால் ஏற்றுக்கொள்ளப்படமாட்டான் என்பது ரூபகாரமாகிறது. சகோதரருக்கான அன்பு நம்மிடத்தில் இல்லை என்றால், எல்லா மனிதரிடத்தில் கருணை மற்றும் சாந்தத்தின் மீதான அன்பும் மிருகங்களிடத்தில் கூட அன்பும் இல்லையென்றால் தற்கால நிலைமையில் தேவையான பலிகளை செலுத்தும்படி நம்மை கொண்டுசெல்லும் ஆவியை நாம் பெற்றிருக்கவில்லை. இப்படிப்பட்டவர்களை பெருமை அல்லது வீண் பெருமை சுய பலியின் வழியிலிருந்து பிரித்து ஒடித்து, சுயநலமானது முழு கட்டுப்பாட்டையும் எடுத்துக்கொள்ள அதிக காலம் ஆகாது. ஆனால் நமது சிந்தை பூரணமாக இருந்தாலும் மாம்சத்தின் அபூரணங்கள் நாம் செய்ய விரும்பும் அனைத்தையும் தடுக்கக்கூடியதாக இருக்கிறது. ஆகையால் நாம் கிறிஸ்துவுக்குள் இருப்பது தேவையானதாக இருக்கிறது. நமது மாம்சத்தின் அபூரணங்களை நமக்கு எதிராக கணக்கில் எடுத்துக்கொள்ளுவதற்கு பதிலாக தேவன் நமது இருதயத்தின், நமது மனதின் நல்ல நோக்கங்களை ஏற்றுக்கொள்வார் என்று நாம் நம்பிக்கை கொண்டிருக்கிறோம்.

### ஒரு தீவிரமான அதோடு கூட தற்காப்பான போராட்டம் தேவை

நமது அனுதின வாழ்க்கையில் நமக்கு வரும்படி தேவன் அனுமதிக்கிற அனைத்து அனுபவங்கள் மூலமாக அவரது சித்தம் மற்றும் பலன்களுக்கான ரூபகாரங்களுக்காக நம்மை அவர் கவனிக்கிறார். எந்த ஒழுங்கையும் தாழ்மையுடன் ஏற்றுக்கொண்டு இந்த ஆவியை பெற்றுக்கொண்டு மகிமை மேல் மகிமை அடையவும், வெற்றி மேல் வெற்றி பெறவும் நாம் வழிநடத்தப்படுவோம். தற்காப்புக்காக மட்டும் நின்று போராடுவது சோர்வடைக் கூடியதாக வெற்றி கிடைக்காததாக இருக்கும். நாம் ஜெயம் கொள்ளுவதற்கு நாம் தேவனுடைய முழு சர்வாயுதவர்க்கத்தையும் தரித்துக் கொள்ளுவது மாத்திரமல்ல, நாம் போர் வீரர்களாக இருந்து, கண்களின்

இச்சை, மாம்சத்தின் இச்சை, ஜீவனத்தின் பெருமை, நீதி மற்றும் பரிசுத்தத்தின் எதிரிகளின் மேலும் நாம் தீவிரமான போர் செய்கிறவர்களாக இருக்க வேண்டும்.

கர்த்தருக்கான அன்பு, சத்தியத்துக்கான அன்பு மற்றும் நீதியின் மேலுள்ள அன்பு நம்மை ஊக்குவிக்க வேண்டும் இல்லையென்றால் நாம் ஜெயங்கொள்ளவே முடியாது. அன்பானது நம்மை மரண பரியந்தம் விசுவாசிகளாக இருக்க வைக்கும்; மேலும் ஒளியுள்ள பரிசுத்தவான்களின் சுதந்தரத்தில் பங்கடைவதற்கு நம்மை தகுதியுள்ளவர்களாக்கும். தீவிரமான அன்பு ஆளுகை செய்கிற இருதயம் முற்றிலுமாக கர்த்தரிடம் ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதையும் முன்னரே பத்தில் ஒன்பது மடங்கு போரில் ஜெயங்கொண்டு விட்டோம் என்பதையும் குறிக்கிறது. அப்போஸ்தலர் யூதா கூறுகிறது போல, தேவனுடைய அன்பிலே நம்மை காத்துக்கொண்டு விழித்திருந்து ஜெபத்திலும் வைராக்கியத்திலும் தரித்திருக்க வேண்டும். அன்பு எங்கே நிறைந்துள்ளதோ அங்கு கிருபை நிறைந்திருக்கும்.

தேவனை பிரியப்படுத்துகிற காரியங்களை செய்வதற்கு எப்பொழுதும் முயற்சி செய்து நாம் தேவனுடைய அன்பில் தரித்ததிருக்க வேண்டும். அவரால் எப்பொழுதும் பூரண மாகத்தான் அன்பு செலுத்த முடியும். நாம் பூரணமாவது இயலாத காரியம். எனினும் நமது பலவீனங்கள் நமது சித்தத்தில் அல்ல, மாம்சத்தில் தான் என்பதை அவர் உணர்கிறார். அவர் நமக்கு ஒரு பரிகாரியை கொடுத்திருக்கிறார். நாம் மீறுதல் செய்தால் நாம் அவரிடம் வரலாம். இப்படியாக நாம் தேவனுடைய அன்பில் நிலைத்திருந்து இயேசுவின் அடிச்சுவட்டில் நடக்க வேண்டும். நமது அடிச்சுவடுகள் வழிவிலகினால் நம்மை சுத்திகரிக்க இயேசுவின் விலையேறப் பெற்ற இரத்தம் நமக்கு இருக்கிறது. நாம் நமது புது சரீரத்தை பெறும் போது அவரது அன்பில் தொடர்ந்து இருந்து, எப்பொழுதும் அவரை பிரியப்படுத்துகிறவர்களாய் இருப்போம். ஏனெனில் நமது சித்தத்தின் பூரணத்தை கெடுக்க சரீர பிரகாரமான அபூரணத்தை பெற்றிருக்கமாட்டோம்.

### சுயநலத்தைக் குறித்து நாம் எச்சரிக்கையாக இருப்போமாக

தேவனுடைய அன்பிலிருந்து பிரிவதற்கு சுயநலம் மட்டுமே முக்கிய காரணமாக இருக்கிறது. நம்மை நாம் கர்த்தரிடம் அர்ப்பணம் செய்து, அவர் நம்மை கிறிஸ்துவுக்குள் புது சிருஷ்டியாக ஏற்றுக்கொண்டு, அவர் நம்மை பரிசுத்த ஆவியினால் ஜெனிப்பித்து, நமது சுயத்தை அவரிடம் ஒப்புவித்ததினாலேயாகும். எந்த நேரத்திலும் நாம் பின்னுக்கு திரும்பி மாம்சத்தை பின்பற்றினால் நாம் நமது அர்ப்பணத்திலிருந்து விலகுகிறோம். இது பல வழிகளில் வெளிப்படுத்தப்படும்; வைராக்கியத்திற்குப் பதிலாக தளர்ச்சியில்; அக்கறைக்குப் பதிலாக அக்கறையின்மையில்; பொறாமை ஆவியின் சுயநல உணர்வில்; அல்லது கோபம், பகைகள் மற்றும் சண்டைகளில், இவைகள் எல்லாம் நாம் தப்பித்திருந்த பழைய சிருஷ்டியின் குணலட்சணங்கள். பழைய சிருஷ்டி ஜெயங்கொள்ளுகிற அளவுக்குத்தக்கதாக புது சிருஷ்டி விழுந்து போகும். இப்படியாக தேவனுடைய அன்பில் இருப்பதிலிருந்து படிப்படியாக நாம் நிறுத்தப்படுவோம். இந்த தவறான நிலைமைகள் நாம் தேவனுடைய அன்பில் தரித்திருப்பதை தடை செய்யும். அது தேவன் மற்றும் இயேசுவுடன் சரியான அணுகு முறையில் இருக்க வேண்டும் என்பதை குறிக்கிறது. முடிந்தால் ஒவ்வொரு பெரிய வழியிலும் கர்த்தருக்கும் சகோதரர்களுக்கும் நமது பலியை செலுத்த நாம் முயற்சிக்க வேண்டும்.

நீதியின் நியமங்களுக்கு கீழ்ப்படிந்தும், நமது உடன்படிக்கைக்கு விசுவாசமாயிருந்தும் இவைகளின் மீதான அன்பில் வளர்வதின் மூலமாகவும் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு மணியும் கர்த்தரின் அன்பில் நம்மை காத்துக்கொள்ளலாம். வாழ்க்கையின் ஒவ்வொரு அனுபவத்திலும் அதாவது அதன் சோதனைகள், கஷ்டங்கள், துயரங்கள், ஏமாற்றங்கள் அனைத்திலும் நாம் களிகூர வேண்டும். அதன் மகிழ்ச்சியில் குறைவில்லை. இவை அனைத்தின் மூலமாக நமது குறைபாடுகள் பற்றியும், சுயாதீன பிரமாணமாகிய பூரண பிரமாணம் மற்றும் அன்பைப் பற்றியும் தெளிவான நுண்ணறிவைத் தருகிறார். அதை அவர் நிறுவியிருக்கிறார். அதற்கு நமது முழுமையான மற்றும் விசுவாசமான இருதய சமர்ப்பித்தல் அவருக்கு தேவைப்படுகிறது.

சத்தியத்துக்கு உண்மையான கீழ்ப்படிதல் மற்றும் அதன் நியமங்களுக்கு இசைந்திருப்பதற்கான தீவிரமான முயற்சி, வழியும் சத்தியமும் விலையேறப் பெற்றதாக வளருதல் மற்றும் சந்தோஷமான நமது விருப்பமான பாதங்கள், நீதி மற்றும் சமாதானத்தின் பாதையில் அதாவது நித்திய ஜீவனுக்குள் வழிநடத்தப்படுகின்றன.

**R4850**

## FINDING A LOST BIBLE
## தொலைந்து போன வேதாகமத்தை கண்டுபிடித்தல்

2 நாளாகமம் 34: 14-33

“நான் உமக்கு விரோதமாக பாவம் செய்யாதபடிக்கு உமது வாக்கை என்னிருதயத்தில் வைத்துவைத்தேன்.” சங்கீதம் 119:11

யோசியா ராஜா ஆலயத்தை மறுசீரமைத்து சுத்திகரிக்கும் வேலையை செய்த போது, நியாயப்பிரமாண புத்தகத்தின் ஒரு பிரதி கண்டெடுக்கப்பட்டது. இந்த புத்தகம் பஞ்சாகமத்தை அல்லது மோசேயின் ஐந்து புத்தகங்களை கொண்டிருந்தது. யோசியாவின் சீர்த்திருத்த வேலைக்கு முன்பு வரை விக்கிரகாராதனை காலத்தில் கர்த்தருடைய சாட்சியங்களின் புத்தகத்தை எங்கோ வைத்துவிட்டபடியால் அதை ராஜா பார்த்ததேயில்லை. இந்த காலம் வரை ஒரு வேளை தெய்வீக சட்டத்தை கேள்விப்படாதிருந்திருக்கலாம். இது நமக்கு ஆச்சரியமாக இருக்கலாம். தற்காலத்தில் நாம் இலட்சக்கணக்கான வேதாகமங்களை பெற்றிருக்கிறோம். ஆனால் பழங்காலத்தில் புத்தகங்கள் பேனாவைக் கொண்டு கடின உழைப்புடன் எழுதப்பட்டன. அது அதிக செலவு உள்ளதாக இருந்தது. ஒரு பிரதி ராஜாவுக்கும் இன்னுமொரு பிரதி ஆலயத்திலும் வைக்கப்பட்டிருந்தது. ஆனால் விக்கிரகாராதனை செய்த ராஜாக்கள் தேவனுடைய

வார்த்தையை பயன்படுத்தாததால் அதை நீண்ட நாட்களுக்கு முன்பே அழித்திருப்பார்கள்.

நியாயப்பிரமாண புத்தகத்தின் பூர்வீக பிரதியை அவன் கேட்கிற அளவுக்கு படிக்கும்படி செய்தான். இஸ்ரேல் தேசம் தேவனுக்கு கீழ்ப்படிந்தால் என்னென்ன ஆசீர்வாதங்கள் கிடைக்கும் என்பது அதில் விவரிக்கப்பட்டிருந்தன. அவர்கள் தேவனுடைய ஊழியத்தையும் அவரது கட்டளைகளையும் நிராகரித்து விக்கிரகாராதனைக்குச் சென்றால் என்னென்ன தண்டனைகள் கிடைக்கும் என்பதையும் விவரித்தது. யோசியாவின் காலத்திற்கு முன் அவனது ராஜ்யத்தில் விக்கிரக ஆராதனை இருந்ததால் உபாகமம் 28 இல் காணப்பட்ட தண்டனைகள் யோசியாவின் ராஜ்யத்திற்கு வரவிருந்தது. ராஜா ஆச்சரியப்பட்டான். தெய்வீக தண்டனை கொடுக்கப்பட வேண்டியிருந்தது. அவை ஏன் தாமதமாயின என்பதை அவன் அறியவில்லை. தீமையை விலக்க, முடிந்தது ஏதாவது செய்யப்பட வேண்டும் என்று சிந்தித்தான். இது குறித்து விசாரிக்கும்படி ஆட்களை அனுப்பினான்.

அந்த காலத்தில் தீர்க்கதரிசியானவளாயிருந்த உல்தாள் என்பவளிடத்தில் விசாரித்தார்கள். அவள் கர்த்தருடைய பதிலை உள்ளபடி கூறினாள். அதாவது தேசம் விக்கிரக ஆராதனையை பின்பற்றியதால் நியாயப்பிரமாணத்தில் சொல்லப்பட்டிருந்த தண்டனைகள் அனைத்தும் அவர்கள் மேல் வரும் என்று கூறினாள். ஆனால் அந்த தண்டனை, அந்த துன்பம் யோசியாவின் நாட்களில் வராமல் தள்ளிப்போடப்பட்டது என்று அறிவிக்கப்பட்டது. ஏனெனில் ராஜா இதைப்பற்றி தெரிந்தவுடன் ஆர்வமுடன் மன்னிப்புக் கேட்டு, மனம் வருத்தத்தை வெளிப்படுத்தினான்.

ராஜா தீமையை நீக்க தமது அதிகாரத்திற்குட்பட்ட அனைத்தையும் செய்து சர்வ வல்லவருக்கு இசைவாக தேசம் முழுவதையும் கொண்டு வந்தான். அவன் பிரதானிகளையும் ஜனங்களின் மூப்பர்களையும் ஆலயத்துக்கு முன்பாக கூடிவரச் செய்து அனைவருக்கும் முன்பாக உடன்படிக்கையின் புத்தகத்தின் வார்த்தைகளை எல்லாம் அவர்கள் காதுகள் கேட்க வாசிக்க செய்தான். அவர்களது குறைகளையும் அவர்களிடமிருந்து எதிர்பார்க்கப்பட வேண்டியதையும் நியாயப்பிரமாண புத்தகத்திலிருந்து வாசிக்க செய்தான். விக்கிரக ஆராதனையிலிருந்து இன்னும் முற்றிலுமாக சுத்திகரிக்கிற வேலையையும் சீர்த்திருத்த வேலையையும் இன்னும் ஆழமாகவும் தனக்கு தெரிந்த அளவுக்கும் அனைத்தையும் ராஜா செய்தான்.

### இன்று வேதாகமம் காணாமல் போய்விட்டது

இன்றைய நாளில் தேவனுடைய புத்தகம் காணாமல் போய்விட்டது என்று ஜனங்களிடம் கூறினால், அவர்கள் ஆச்சரியப்படுவார்கள். நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்? கிறிஸ்தவ தேசங்களில் இலட்சக்கணக்கான வேதாகமம் காணாமல் போய்விட்டதா? ஒவ்வொரு வருடமும் நாம் இலட்சக்கணக்கான வேதாகமங்களை அச்சடிக்க வில்லையா? இன்றைக்கு எப்படி வேதாகமம் காணாமல் போய்விட்டது என்று சொல்லுகிறீர்கள்?

ஐயோ! நம்மிடம் வேதாகமம் இருக்கிறது. ஆனால் பெரும்பாலான நாகரீமடைந்தவர்களிடம் தேவனுடைய ஊக்கமளிக்கும் வார்த்தை இல்லை. இனி அது தேவனுடைய ஊக்கமளிக்கும் வார்த்தையாக இருக்காது! இனி அவைகள் வாசிக்கப்பட்டு, விசுவாசிக்கப்பட்டு கீழ்ப்படியப் போவதில்லை. வேதாகமத்தை வைத்திருப்பது ஒரு வழக்கமாக இருக்கிறது. அதிலிருந்து குறிப்புகளை எடுப்பது ஊழியக்காரர்களுக்கும் கூட ஒரு வழக்கமான செயலாக இருக்கிறது. ஆனால் தனிப்பட்ட முறையில் அதில் விசுவாசமில்லை என்பதை ஒப்புக் கொள்கிறார்கள். ஷேக்ஸ்பியரிடத்தில் இருக்கும் விசுவாசம் கூட வேதாகமத்தில் அவர்களுக்கு இல்லை. தேவனுடைய வார்த்தை பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டு எழுதப்பட்டது என்பதை நிராகரிக்கிற மத ஊழியர்கள் பெரும்பாலான ஜனங்களைக் காட்டிலும் அதிகமாக இருக்கிறார்கள். மகா பிரிட்டன், ஜெர்மனி, அமெரிக்கா மற்றும் கனாடவில் கிறிஸ்தவ கல்லூரிகள், கலாசாலைகள், வேதகாம கல்லூரிகளில் பட்டப்படிப்பு பெற்றவர்களே கடந்த இருபது வருடங்களாக ஊழியர்களாக இருக்கின்றனர்.

கர்த்தருடைய வார்த்தை எப்படி இப்படியாக காணாமல் போனது? இருண்ட யுகம் என்ற அழைக்கப்பட்ட நீண்ட காலத்தில் சபை கவுன்சில்கள் மற்றும் ஆணைகளுக்கு ஆதரவாக கர்த்தருடைய வார்த்தை ஒதுக்கி வைக்கப்பட்டது என்று சரித்திரம் கூறுகிறது என்று நாங்கள் பதிலளிக்கிறோம். அதன்பிறகு சீர்த்திருத்த காலம் வந்தது. கத்தோலிக்கர்கள் வேதாகத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார்கள். இது துவே **(Douay)** மொழி பெயர்ப்பு என்று அழைக்கப்பட்டது. புரட்டஸ்ட்டண்ட் சபையார் வேதாகமத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார்கள். அது கிங்ஸ் ஜேம்ஸ் மொழி பெயர்ப்பு **(King James Version)** என்று அழைக்கப்பட்டது. மறுபடியுமாக தேவனுடைய வார்த்தை மறுரூபமான செல்வாக்கை மானிடரிடையே அப்பியாசப்படுத்த ஆரம்பித்தது.

ஆனால் ஐயோ! முன்னரே மனிதரின் சிந்தையில் இருந்த தப்பறைகள், இருண்ட யுகத்தின் மூட நம்பிக்கை தேவனுடைய வார்த்தைக்கு விநோதமான திரிபுகளை கொடுத்தன. சபை பிரிவுகள் என்ற நிறமுள்ள கண்ணாடி மூலம் அதை முழுவதுமாக பகுத்தறிவற்றதாகவும் புத்திக்கெட்டாததாகவும் காணும்படி செய்தார்கள்.

கல்வியின் முன்னேற்றத்தினால், மதம் மற்றும் விஞ்ஞானத்தின் திசையில் சிந்தனைகள் மீண்டும் தொடங்கியது. எனினும் சிந்தனையாளர்கள் வேதாகமத்தை அவர்கள் முன்னரே பார்த்திருந்த நிறமுள்ள கண்ணாடி மூலமாகவே நோக்கினர். கடந்த இருண்ட காலத்தின் மூட நம்பிகைகளை அவர்கள் புறக்கணித்த அளவுக்குத்தக்கதாக, வேதாகமத்தை அந்த மூட நம்பிக்கைளின் ஒரு பகுதி என்றும் அவைகளின் அடிப்படை என்றும் நினைத்து புறக்கணித்தனர். அதன் பலனாக, பள்ளி ஆசிரியர்கள், கல்லூரி பேராசிரியர்கள், வேதாகம பண்டிதர்கள் முதலானோர் தேவனுடைய வார்த்தைக்கு எதிராக அது போதிக்காத பல்வேறு போதனைகளை சாட்டியிருக்கிறார்கள். அவைகளில் ஒன்று "தெரிந்து கொள்ளப்பட்டவர்களைத்" தவிர மற்ற அனைவருக்கும் உத்தரிக்கும் ஸ்தலம் மற்றும் நித்திய ஆக்கினை என்பதாகும்.

இப்பொழுது ஏற்ற காலத்தில் தேவனுடைய வார்த்தை கண்டுபிடிக்கப்பட்டு கொண்டிருக்கிறது. இருண்ட காலத்தின் குப்பைகள் ஒதுக்கி தள்ளப்பட்டு கொண்டிருக்கின்றன. வேதாகமமானது அதன் சொந்த போதனைகளின் வெளிச்சத்தில் ஆராய்ச்சி பண்ணப்படுகின்றது. அது நீதியின் பாதையில் அற்புதமாக பிரகாசித்துக் கொண்டிருக்கிறது. "நீதிமான்களுடைய பாதை நடுப்பகல் வரைக்கும் அதிகமதிகமாக பிரகாசிக்கும்" என்கிற தேவனுடைய வாக்குத்தத்தின் நிறைவேறுதலை நாம் நமக்கு முன்னே பார்த்துக் கொண்டிருக்கிறோம். தற்காலத்தில் அதன் பிரகாசம் புதிய நாள், மேசியாவின் ராஜ்யத்தின் புது சகாப்தம் சமீபமாயிருக்கிறது என்பதை குறிக்கிறது.

## R4851 "THE LORD IS MY SHEPHERD"
## "கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார்"

தீர்க்கதரிசி தாவீது தன்னைக் குறித்தே 23ஆம் சங்கீதத்தை எழுதினார். ஆனால் அவரது வார்த்தைகளில் இன்னும் ஆழமான பொருள் இருக்கிறது. அதாவது யேகோவா மெய்யான தாவீதாகிய கிறிஸ்துவுக்கு (The Christ) மேய்ப்பராயிருக்கிறார். கிறிஸ்து என்பது தலையாகிய இயேசுவும் சரீரமாகிய சபையும் சேர்ந்ததாகும்.

கர்த்தருக்கு இணக்கமான மனோபாவத்தை உடையவர்களாக இருக்கிறவர்கள் தற்கால சூழ்நிலைக்கு இணக்கமில்லாதிருக்கிறார்கள். இந்த சூழ்நிலையில் கர்த்தரின் "ஆடாக" அவர்களது ஆவிக்குரிய வளர்ச்சிக்கு சாதகமற்ற சூழ்நிலைகளில் மகா சத்துருவானவன் அவர்களை அழிக்க விரும்புகிறான். நரிகள், ஓநாய்கள், சிங்கங்கள் மற்றும் கால்நடைகள் கூட எதிர்க்கவும் தன்னைக் காத்துக்கொள்ளவும் செய்யும். ஆனால் ஆடுகளுக்கு யாருமே இல்லை. ஆகையால் ஆடுகள் மேய்ப்பனை நம்பியே இருக்கின்றன. வேறு வார்த்தையில் சொல்லுவோமானால், அவை மேய்ப்பனை விட்டு விலகியிருந்தால் பாதுகாப்பற்ற சூழ்நிலையில் இருக்கின்றன. தேவன் மனிதனுக்கு பாதுகாப்பை அருளியிருந்தார். ஆனால் பாவத்தினால் வனாந்தர நிலைமைக்குச் சென்றான்; பல்வேறு துன்பங்களுக்கு ஆளானான். இல்லையென்றால் இப்படிப்பட்ட நிலைமை மனிதனுக்கு இருந்திருக்காது.

"ஆடாக" இருப்பவர்கள் கர்த்தருடன் இணக்கத்திற்கு திரும்பி வருவார்கள். நமது வசனத்தில் குறிப்பிடப்பட்டிருப்பது போல சபை வகுப்பார் இந்த காலத்தில் திரும்பி வருவார்கள். காலம் செல்லச்செல்ல, தெய்வீக கவனிப்பு எப்படி தேவைப்படுகிறது என்பதை நாம் அனைவரும் உணருகிறோம். தெய்வீக திட்டத்தின்படி இந்த மந்தையில் உள்ள அனைவரும், தேவனுடன் இணக்கத்திற்கு வரும் அனைவரும் இந்த கவனிப்பை பெறுவார்கள். கடைசியாக ஒரே மந்தையும் ஒரே மேய்ப்பனுமே இருக்கும்.

நமது கர்த்தராகிய இயேசு பிதாவானவரின் பிரதிநிதியாக இருக்கிறார். கர்த்தரின் ஆடுகளாகிய மனுக்குலம் வழி தவறி சென்று விட்டது. ஆதாமின் சந்ததியினர் அனைவரும் இப்பொழுது காணாமல் போய்விட்டனர். மகா மேய்ப்பர் காணாமற்போன ஆடுகளைத் தேடி தமது குமாரனை அனுப்பினார். அவர் அவைகளை தேடிக் கொண்டிருக்கிறார். கடைசியில் இந்த உண்மையான மந்தையை கண்டுபிடிப்பார். ஆகையால் அவர் மெய்யான பொருளில் கண்காணியாக, நமது ஆத்துமாக்களின் மேய்ப்பனாக இருக்கிறார். நல்ல மேய்ப்பன் தன் ஆடுகளுக்காக தன் ஜீவனைக் கொடுக்கிறான்.

## R4854 PROVIDING FOR ONE'S NATURAL HOUSEHOLD
## ஒருவனுடைய சொந்த குடும்பத்தை விசாரித்தல்

"ஒருவன் தன் சொந்த ஜனங்களையும் விசேஷமாக தன் வீட்டாரையும் விசாரியமற்போனால்,
அவன் விசுவாசத்தை மறுதலித்தவனும், அவிசுவாசியிலும் கெட்டவனுமாயிருப்பான். ." 1 தீமோத்தேயு 5:8

இந்த வசனத்திற்கு கீழ்க்கண்டவாறு பொருள் கூறலாம். தன்னை சார்ந்திருக்கிறவர்களை, விசேஷமாக தன் சொந்த வீட்டாரை கவனிக்காதவன் விசுவாசத்தை மறுதலித்தவனும் அவிசுவாசியை விட மோசமானவனுமாய் இருப்பான்.

இது ஒரு கிறிஸ்துவ புருஷன் தன் மனைவியையும் தன் பிள்ளைகளையும் கவனிக்க வேண்டிய கடமையைப் பற்றிக் கூறுகிறது. கணவன் மனைவிக்கு செய்ய வேண்டிய கடமைகளை செய்யவில்லை என்றால். அவளை நேசிக்கவில்லை என்றால், இருதயத்திலோ அல்லது அன்பிலோ கைவிட்டுவிட்டான் அல்லது உண்மையிலேயே அவன் கர்த்தரிடமிருந்து, ஆவியின் வழிநடத்துதலிலிருந்து, "முதலாவது சுத்தமுள்ளதாயும், பின்பு சமாதானமும், சாந்தமும் இணக்கமும் உள்ளதாயும் இரக்கத்தாலும் நற்கனிகளாலும் நிறைந்ததாயும் இருக்கிற பரலோகத்திலிருந்து வருகிற ஞானத்திலிருந்தும்" பிரிந்து விட்டான் என்பதை குறிக்கிறது.

இந்த சூழ்நிலைகளில் இப்படிப்பட்டவர்களை "ஜெயங்கொண்டவர்கள்" என்று கர்த்தரால் அங்கீகரிக்கப்பட்டவர்கள் என்று, அவர்கள் சீர்திருந்துகிறவரை நினைக்கக்கூடாது. மேலும் ஒவ்வொரு பெற்றோரும் அபூரண, சாகக்கூடிய சரீரத்தையும் உடைய குழந்தையை இந்த உலகத்திற்கு கொடுப்பதோடு அவன் வாழ்க்கையை ஆரம்பிக்கூடிய அனைத்தையும் கொடுக்க கடமைப்பட்டிருக்கிறார்கள். குழந்தைகளை உலகத்திற்குள் கொண்டு வந்த பிறகு, அவர்களை இந்த உலகில் சரியானபடி நிலைநாட்டுவது பெற்றோர்களது கடமையாயிருக்கிறது. இதில் குழந்தை மற்றும் வாலிப பருவத்தில் தேவையான உணவு மற்றும் ஆடை மட்டுமல்ல, அறிவுப்பூர்வமான மற்றும் நீதி நெறிமுறைகளைப் பற்றிய அறிவுரைகளும் அடங்கும். இதை குறித்து நாம் அநேகம் தடவை குறிப்பிட்டிருக்கிறோம். இவை எல்லாம் குழந்தைகளுக்கான அனைத்தையும் குறிப்பிடுகிறது.

வாழ்க்கையின் நிச்சயமின்மையை பார்க்கும் போது குழந்தைகள் தகுந்த பருவத்தை அடையும் முன்பே ஒருவேளை பெற்றோர் மரித்துப் போகக்கூடிய நிலையில் பெற்றோர்கள், பிள்ளைகளுக்கானதை சேர்த்து வைப்பது அவசியம் என்று வேதாகமம் கூறுவது நியாயமற்றதாக இருக்க முடியாது. பெற்றோர்கள் அதிக செல்வத்தை பிள்ளைகளுக்காக சேர்த்து வைத்து, அது குறித்து அவர்கள் சண்டையிட்டுக் கொள்ள வேண்டும் என்று அப்போஸ்தலர் குறிப்பிடுகிறார் என்று நாங்கள் நினைக்கவில்லை. குழந்தை நல்லபடியாக பிறந்து தேவையான கல்வியையும் பருவத்திற்குரிய வழிமுறைகளையும் பெற்றால் அவன் நல்லவிதமாக இருக்கிறான். நல்ல பரம்பரை சொத்தை பெற்றிருக்கிறான். தங்கள் பிள்ளைகளுக்கு இப்படிப்பட்ட ஏற்பாடுகளை செய்ய பெற்றோர் பலமும் தெளிந்த புத்தியுள்ள ஆவியினால் வழிநடத்தப்படுகிறார்கள். கர்த்தரால் அங்கீகரிக்கப்பட்ட மனநிலைமையை பெற்றிருக்கிறார்கள். அவர்கள் தங்களது குடும்பத்துக்கு சொத்து எதுவும் வைக்காமல் ஒரு வீட்டை மட்டும் வைத்திருந்தால் கூட தெளிந்த புத்தியுள்ள ஆவியை பெற்றிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் தங்கள் உக்கிராணத்துவத்தை நிறைவேற்றியிருக்கிறார்கள். முடிவில் அப்படிப்பட்ட பிள்ளை பெற்றோரின் விசுவாசத்தை உணருவார்கள்.

நாம் பொதுவான ஜனங்களைக் காட்டிலும் இரத்த சம்பந்தமான உறவு உள்ளவர்கள் மீது அதிக அக்கறையை

வெளிப்படுத்த வேண்டும். கர்த்தருடைய ஆவி நம்மை பொதுவான மனுக்குலம் மீது தயவுக்கும் கிருபைக்கும் வழிநடத்தினால், நமது மனோபாவம் நமது உறவினர்கள் மீது இன்னும் அதிகமாக இருந்து சந்தர்ப்பத்திற்குத்தக்கதாக உதவி செய்ய வேண்டும் என்பதை சுட்டி காட்டுகிறது. எனினும் நமது தீர்மானத்தின்படி, வேதவாக்கியங்களில் சொல்லப்பட்டதற்கு எதிராகவோ, நமது கர்த்தரும் நமது அப்போஸ்தலர்களும் அவர்களது நடத்தைகளின் மூலமாக நமக்கு வைத்திருக்கும் உதாரணங்களுக்கு மாறாகவும் நமது பூமிக்குரிய உறவினர்களுடன் அதிகம் ஐக்கியம் வைத்திருப்பது ஞானமாக இருக்காது. அல்லது அவர்களை விசுவாச வீட்டாரைக் காட்டிலும் அதிகமாக வரவேற்று நடத்துவது ஞானமானதாக இருக்காது.

"ஒருவன் தன் சொந்த ஜனங்களையும் ..........அவன் விசுவாசத்தை மறுத்தலித்தவனும் அவிசுவாசியிலும் கெட்டவனாயிருப்பான்" என்கிற அப்போஸ்தலரின் வார்த்தைக்கு இசைவாக நெருங்கிய உறவினர்களுக்கு ஒரு விதிவிலக்கை நாம் இங்கே செய்கிறோம். பொதுவாக இநத விதிவிலக்குக்கு மேலாக "நமக்கு கிடைக்கும் சமயத்திற்கு தக்கதாக, யாவருக்கும் விசேஷமாக விசுவாச குடும்பத்தார்களுக்கும் நன்மை செய்யக்கடவோம்" என்கிற அப்போஸ்தலரின் வார்த்தைகளை பிரயோகிக்க வேண்டும். (கலாத்தியர் 6:10) நமது விசுவாச குடும்பத்தாருக்கு அடுத்தபடியாக நமது தூரத்து உறவினர்கள் வரவேண்டும்.

புது சிருஷ்டியின் நிலைப்பாட்டிலிருந்து, புது உறவு, கிறிஸ்துவின் அங்கங்கள், நமது சொந்த குடும்ப அங்கங்களாக இருப்பார்கள். அவர்களது தற்காலிக தேவைகள் ஓரளவுக்கு நமது பொறுப்பாக இருக்கும். எனினும் நமது கர்த்தர் வாழ்ந்த காலத்தில் நாம் இப்போது வாழவில்லை. தற்காலத்தில் அநேக பொதுவான தர்ம ஸ்தாபனங்கள் இருக்கின்றன. இந்த காரணத்தினால் தான் இந்த வார்த்தைக்கு அப்போஸ்தலர் காலத்தில் கொடுக்கப்பட்ட அழுத்தம் இப்பொழுது கொடுக்கப்படுவதில்லை. சில சமயங்கள் ஒருவர் பொதுவான சொத்திற்கு வரி செலுத்தும் போது சரியான ஏற்பாட்டை செய்வார். அதன் பலனில் அவரும் பங்கு பெறும் அவசியம் ஏற்படும். பிற்காலத்தில் அவரது சொந்த கணக்கிலோ அல்லது சில சொந்த நண்பர்கள் அல்லது அவரது சொந்த குடும்ப அங்கங்கள் கணக்கிலோ அனுபவிப்பார்.

## மகா பரிசுத்தமான விசுவாசத்தில் ஒருவரை ஒருவர் உறுதிப்படுத்திக் கொள்ளுதல்

அவனது சொந்த குடும்பத்திற்கு இயேசுவே தலை. அவர் அவருடைய ஜனங்கள் ஒருவருக்கொருவர் தேவையில்லாமல் சுமையாக இருக்கக்கூடாது என்று நோக்கம் கொண்டவர். ஆனால் ஒவ்வொருவரும் பிறருக்கான தனது பொறுப்பை உணர்ந்து, சந்தோஷத்துடன் உதவிக்கரம் நீட்ட வேண்டும். "ஒருவருக்கொருவர் மகா பரிசுத்தமான விசுவாசத்தில் உறுதிப்படுத்தி" ஆசீர்வாத்ததை பெற உற்சாகப்படுத்த வேண்டும். தமது சீஷர்களை ஒரு புது குடும்பமாக இணைத்து "ஒரு விசுவாச குடும்பமாக" ஆக்க வேண்டும் என்பதே நமது கர்த்தரின் நோக்கமாகும். ஆகையால் தான் நமது பரஸ்பர ஐக்கியம், பரஸ்பர உதவி மற்றும் கிரமமான கூடுகைக்காகவும் மீண்டும் மீண்டுமாக கட்டளைகளையும் உற்சாகத்தையும் கொடுத்து, எங்கே இரண்டு பேர் அல்லது மூன்று பேர் கர்த்தரின் நாமத்தினிமித்தம் கூடும் போது அவர் அங்கே அவர்களது நடுவேயிருந்து அவர்களை ஆசீர்வதிப்பதாகவும் வாக்குத்தத்தையும் நமது கர்த்தர் கொடுத்ததையும் நாம் காண்கிறோம். அவரது ஜனங்கள் சபை கூடி வருகிறதை விட்டு விடக்கூடாது.

நமது வசனத்திற்கு வரும் போது, தனது சொந்த குடும்பத்தை கவனியாதவன் விசுவாசத்தை மறுதலிக்கிறவனாயிருக்கிறான் என்று அப்போஸ்தலர் கூறுவதை நாம் கவனிக்கிறோம். நாம் கூறுகிற விசுவாசம் என்பது சில காரியங்களில் நாம் பெறுகிற விசுவாசத்தை மாத்திரம் குறிக்காமல், உரிமைக்குரிய காரியங்கள், நமது குணலட்சணம் பொதுவாக நமது வாழ்க்கையின் காரியங்களையும் பாதிக்கிறது. மற்றவர்கள் தேவனை நேசிக்கிறதைக் காட்டிலும் நாம் அதிகமாக அவரை நேசிக்கிறோம் என்று கூறுகிறோம். நாம் நம்மை நேசிக்கிறது போல பிறனையும் நேசிக்கிறோம் என்று கூறுகிறோம். இதை நமது தர நிலையாக எடுத்துக்கொள்ளுகிறோம் என்று கூறுகிறோம். தன்னைத்தான் நேசிப்பது போல பிறனை நேசிப்பது ஒரு மனிதனுடைய பொறுப்பு என்றால் தனது குடும்பத்தை இரட்டிப்பான அளவு கவனிக்க வேண்டும் என்பதை மனதில் கொள்ள வேண்டும். ஒருவன் அதை கைவிட்டால், அவன் பிரசங்கிக்கிற கிறிஸ்துவின் போதனைகளை தவறாக சித்தரிப்பதாகும். போதனைகளை போதித்துக் கொண்டு அதற்கு மாறாக வாழ்ந்தால் அது தான் விசுவாசத்தை மறுதலிப்பது. வாழ்க்கையின் இந்த அங்கீகரிக்கப்பட்ட நிலைமையை மீறி ஒருவர் வாழ்ந்தால் உலகத்தாரைக் காட்டிலும் மேலாக அல்ல கீழாக வாழ்கிறவராவார்.

விசுவாசத்தை மறுதலிப்பது என்பது அன்பு இல்லாமை, இரக்கமின்மை, அக்கறையின்மை, அந்த அளவுக்கு விசுவாசம் மறுதலிக்கப்படுகிறது. பெரிய வேதனையிலும் துன்பத்திலும் மற்றவர்களைக் குறித்து இரக்கத்துடன சிந்திக்கூடிய நமது ஆண்டவரின் சுயநலமின்மையை ஒரு பரிபூரண உதாரணமாக நாம் பெற்றிருக்கிறோம்! தமது தாயைப் பற்றிய அக்கறையும் தமது அன்பான சீஷன் யோவானிடம் தமது தாயை ஒப்படைத்ததும் உயர்ந்த குணலட்ணத்தைக் குறிக்கிறது. இந்த கடைசி மணி சோதனை நேரத்தில் யோவான் தனது ஆண்டவருடன் இருந்ததும் அவரது உயர்ந்த குணத்தை காண்பிக்கிறது!

R4854

## THE CHURCH'S SHARE IN THE SIN-OFFERING

## பாவ நிவாரண பலியில் சபையின் பங்கு

நியாயப்பிரமாணத்தை கைக்கொண்டதிலும், பிதாவுக்கு அவரது கீழ்ப்படிதலிலும் அவரது ஜீவனை கொடுப்பதிலுமே கிறிஸ்துவின் புண்ணியம் அடங்கியிருந்தது. அவர் மரிக்கும் போது அது நீதியின் கைகளில் வைக்கப்பட்டது. "பிதாவே, உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்." எல்லாம் பிதாவின் கைகளில் ஒப்புவிக்கப்பட்டது. அது ஒரு மீட்கும் விலைக்கிரயமாக பிதாவின் கைகளில் இருக்கிறது. தேவன், நமது கர்த்தரை மரித்தோரிலிருந்து எழுப்பும் போது ஒரு மானிட ஜீவியாக எழுப்பாமல், ஒரு ஆவியின் உயர்ந்த நிலைமையில் எழுப்பினார்.

வேத வாக்கியங்கள் சபையைப் பற்றி அறிவிப்பது போல, சபையின் தலைக்கு உண்மையாக இருப்பது போல சபைக்கும் உண்மையாக இருக்கிறது. ஏனெனில் அவரது அடிச்சுவட்டை நாம் பின்பற்றுகிறோம். சபையைப் பற்றி எழுதப் -பட்டிருக்கிறதாவது: "கனவீனமுள்ளதாய் விதைக்கப்படும், மகிமையுள்ளதாய் எழுந்திருக்கும்; பலவீனமுள்ளதாய் விதைக்கப்படும், பலமுள்ளதாய் எழுந்திருக்கும். ஜென்ம சரீரம் விதைக்கப்படும், ஆவிக்குரிய சரீரம் எழுந்திருக்கும்." (1 கொரிந்தியர் 15:42-45) நமது கர்த்தர் உயிர்ப்பிக்கிற ஆவியாக உயிர்ப்பிக்கப்பட்டார். (1 கொரிந்தியர் 15:45; 1 பேதுரு 3:18) ஒரு மனிதன் ஜீவனை இழந்தார். ஒரு மனிதன் தம்மை அதற்கு மீட்கும் பொருளாக, ஈடுபலியாக கொடுத்தார். (1 கொரிந்தியர் 15:21,22)நமது கர்த்தரின் மானிட சுபாவத்தின் பலி உலகத்தின் சார்பில் ஒரு பலியாக இருந்தது. அதை அவர் உலகத்திற்கு கொடுத்திருக்கிறாரா? இல்லை. அதை வைத்து என்ன செய்கிறார்? அதை பிதாவினிடத்தில் ஒப்புக் கொடுத்திருக்கிறார். அது யாருடைய கணக்கில் வைக்கப்பட்டிருக்கிறது? நமது ஆண்டவரின் கணக்கில் வைக்கப்பட்டிருக்கிறது. எங்கே? தெய்வீக நீதியின் கைகளில். என்ன நோக்கத்திற்காக? அது உபயோகப்படுத்தப் -படுவதற்காக, எப்படி உபயோகப்படுத்தப்படும்?

முதலாவது இந்த சுவிசேஷ யுகத்தில் கிறிஸ்து மூலம் பிதாவினிடத்தில் வருகிற அனைவருக்கும் சாட்டுதல் செய்வதற்காக ஆகும். இவர்கள் விசுவாசத்தில் பிதாவினிடத்திற்கு திரும்பப் பெற்று, "என் சரீரத்தை நான் ஜீவ பலியாக ஒப்புக்கொடுக்கிறேன்" என்றும் "கர்த்தாவே, இங்கே என்னை ஒப்புக் கொடுக்கிறேன்" என்றும் கூறுகிற அளவுக்கு வந்த பிறகு அதை அவர் சாட்டுதல் பண்ணுகிறார். மாபெரும் பரிகாரி, உலகத்தின் எதிர்கால மத்தியஸ்தர், அவரது புண்ணியத்தை அதிகமாக சாட்டுதல் செய்து அவர்களது பலியை தேவனுக்கு பிரியமானதாக்குகிறார். தேவன் ஏற்றுக்கொள்ளுகிற அளவுக்கு அவர்களிடம் ஏதுவுமே இல்லை. "நீதிமான் ஒருவனாகிலும் இல்லை." (ரோமர் 3:10)

இங்கே மாபெரும் பரிகாரி, முன்னரே நீதியின் கைகளில் இருக்கும் அவரது புண்ணியத்தை போதுமான அளவுக்கு நீதியின் பார்வையில் இவர்களை பூரணராக்குவதற்கு பயன்படுத்துகிறார் அல்லது சாட்டுதல் பண்ணுகிறார். பிறகு தெய்வீக நீதி பலியை ஏற்றுக்கொள்ளுகிறது. பலி ஏற்றுக்கொள்ளப்படுதல், பரிசுத்த ஆவி அளிக்கப்படுதல் மூலமாக, ஆவியின் ஜெனிப்பித்தல் மூலமாக வெளிப்படுத்தப்படுகிறது. ஜெனிப்பிக்கப்பட்ட ஆவியின் சித்தம் உயிர்த்தெழுதலில் ஆவியில் பிறக்கும். இல்லையென்றால் இதற்கிடையில் நிலைமை பாழாகலாம். ஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்ட ஒருவன் ஆவியை இழந்தால், ஆவிக்குரிய காரியங்களில் மரித்தவனாகிறான். பிறகு அவன் அப்போஸ்தலர் கூறுவது போல உண்மையிலேயே "இரண்டு தரம் செத்து," போகிறவனாகிறான். (யூதா 12)

### சபையானது பாவத்திற்கான பலியில் பங்கு பெறுகிறதா?

இப்பொழுது, இப்படியாக கிறிஸ்துவினால் ஏற்றுக்கொள்ளப்பட்டவர்கள் விஷயத்தில், பாவத்திற்கான பலிக்கு அவர்கள் என்ன செய்ய வேண்டும்? அவர்கள் என்ன செய்ய வேண்டும் என்பதை நாம் தெரிந்து கொள்ள வேண்டாம் என்று நாங்கள் பதிலளிக்கிறோம். தேவன் நமக்கு அதை தெரியப்படுத்தவில்லை. ஆனால் தேவன் இதை பழைய ஏற்பாட்டில் ஒரு சித்திரமாக செய்திருக்கிறார். அவர் யூதர்களிடம் பாவ நிவாரண நாள் என்கிற நாளை ஏற்பாடு செய்திருந்தார். அதில் இந்த சுவிசேஷ யுகத்தில் என்ன செய்யப்படும் மற்றும் மேசியாவின் ஆளுகையில் என்ன செய்யப்படும் என்பது முன்னுரைக்கப்பட்டது. இது என்ன? இது தேவனுக்கும் மனுஷருக்குமிடையே சமரசத்தை ஏற்படுத்துதல் ஆகும். இந்த முன்னடையாளம் எப்படி இதை காண்பிக்கிறது? பாவ நிவாரண நாள் என்பது பல்வேறு அம்சங்களைக் கொண்டது. அது ஒரு காளையின் பலியில் ஆரம்பிக்கிறது; அந்த காளை, சபையின் சார்பாக கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பலியை குறித்தது. காளையின் இரத்தம் விசுவாச குடும்பத்தாருக்காக கிருபாசனத்தில் தெளிக்கப்பட்டது. இரண்டு ஆடுகள் மூலமாக விசுவாச வீட்டார் குறிப்பிடப்பட்டார்கள்.

இந்த ஆடுகள் உங்களையும் என்னையும் தங்கள் சரீரங்களை பரிசுத்தமும் தேவனுக்கு பிரியமுமான ஜீவ பலியாக ஒப்புக்கொடுத்திருக்கிற தேவனுடைய ஜனங்கள் அனைவரையும் குறிப்பிடுகின்றன. (ரோமர் 12:1,2; எபிரேயர் 13:11-13) இந்த ஆடுகளில் ஒன்று மட்டுமே காளையைப் பின் பற்றி காளையின் அனுபவங்களை சரியானபடி அனுபவித்தது. இந்த ஆடு விசுவாசிகளின் வகுப்பாரை குறிக்கிறது. அவர்கள் அனுதினமும் இயேசுவின் அடிச்சுவட்டை பின்பற்றி தற்காலத்தில் அவரது பாடுகளில் பங்கு பெற்று, வரக்கூடிய மகிமையில் அவருடன் பங்கு பெறுவார்கள்.

மற்ற ஆடு, பலி கொடுக்க தானாக முன் வராமல், ஆனால் பாவத்திற்கு திரும்பாமல் விரும்பி பலிகொடுக்க தவறுகிற வகுப்பாரைக் குறிக்கிறது, ஆகையால் இந்த வகுப்பு "போக்காடாக" கருதப்பட்டு வனாந்திர நிலைமைக்கு இன்னல்கள் அடைவதற்காக அனுப்பப்படுகிறது. இந்த வகுப்பாரைக் குறித்து அப்போஸ்தலர் குறிப்பிடுகிறதாவது: "அப்படிப்பட்டவனுடைய ஆவி கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாளில் இரட்சிக்கப்படும்படி," (1கொரிந்தியர் 5:5) இவர்கள் மணவாட்டி வகுப்பு அல்ல. ஆனால் ஊழியம் செய்யும் ஒரு வகுப்பு.

சங்கீதம் 45இல் பரலோக மணவாளனின் சித்திரத்தை நாம் பெற்றிருக்கிறோம். அதில் அவர் எப்படி தனது மணவாட்டியை மகா பெரிய ராஜாவாகிய பரலோக பிதாவிடம் அறிமுகப்படுத்துகிறார் என்பதை நாம் காண்கிறோம். அவரைத் தொடர்ந்து மணவாட்டி "பூரண

மகிமையுள்ளவளாய்" பொற்சரிகையும் சித்திர தையலாடையும் தரித்தவளாய் பரலோக ராஜாவினிடத்தில் கொண்டுவரப்படுகிறாள். அவளைத் தொடர்ந்து மூன்றாவதாக "அவளுடைய தோழிகளாகிய கன்னிகைகள்" கூட்டிக்கொண்டு வரப்படுகிறார்கள். அவர்களும் ராஜாவினிடத்தில் கொண்டு வரப்படுகிறார்கள். இந்த வகுப்பு மற்ற ஆடாகிய "போக்காட்டை" குறிக்கிறார்கள். இவர்கள் தானாக முன் வந்து பலி கொடுக்க விரும்பாதவர்கள். அதனிமித்தம் அவர்கள மணவாட்டி வகுப்பின் அங்கங்களாக எண்ணப்பட முடியாது.

இந்த பாவ நிவாரண பலியை வேத வாக்கியங்கள் காண்பிக்கிறபடியால் நாம் பாவ நிவாரண பலியை நம்புகிறோம். இந்த காரியங்களில் நாம் பங்கு பெறுவோம் என்று வேத வாக்கியங்கள் கூறுவதால் நாம் இதில் நம்பிக்கை வைக்கிறோம். இப்படியாக அப்போஸ்தலர் எங்கே கூறுகிறார்? நாம் அதற்கு பதிலளிக்கிறோம். அப்போஸ்தலர் நம்மை "கர்த்தரின் ஆடு" என்று குறிப்பிட்டு அவர் கூறுகிறதாவது: "ஆகையால், நாம் அவருடைய நிந்தையை சுமந்து பாளையத்துக்கு புறம்பே அவரிடத்திற்கு புறப்பட்டு போகக்கடவோம்." மேலும் அப்போஸ்தலர் எந்த மிருகங்களுடைய இரத்தம் பாவங்களினிமித்தமாக மகா பரிசுத்த ஸ்தலத்துக்கு பிரதான ஆசாரியனால் கொண்டு போகப்படுகிறதோ, அந்த மிருகங்களின் உடல்கள் பாளையத்துக்கு புறம்பே சுட்டெரிக்கப்படும் என்று கூறுகிறார். (எபிரேயர் 13:11-13) இவை எந்த மிருகங்கள்? இரண்டு மட்டுமே. காளையும் கர்த்தரின் ஆடு மட்டுமே. நாம் இந்த ஆட்டினால் குறிப்பிடப்படுகிறோம். "ஆகையால் நாம் அவரோடு கூட பாளையத்துக்கு புறம்பே செல்லுவோம்." காளைக்கு செய்யப்பட்டது அனைத்தும் கர்த்தரின் ஆட்டுக்கும் செய்யப்பட்டது. நாம் அவரது அடிச்சுவட்டில் நடப்போமானால் அவரது பலியிலும் நாம் பங்கு பெறுவோமாக. "நாம் அவருடைய நிந்தையை சுமந்து பாளையத்துக்கு புறம்பே அவரிடத்திற்கு போகக்கடவோம்." ஏனெனில் "நாம் அவரோடு பாடுபட்டால் அவரோடு கூட ஆளுகை செய்வோம்." நாம் அனைவரும் சேர்ந்து மகிமையடைவோம். ( 2தீமோத்தேயு 2:11,12)

### பாவ நிவாரண பலியில் சபையும் சேருகிறதா?

கர்த்தர், சபையின் அங்கங்களுக்கு அவர்களது பலியை நிறைவேற்றுவதற்கு தேவையான தமது பலியின் புண்ணியத்தை கொடுத்தால் பாவ நிவாரண பலியில் சபையானது எதை கூட்ட முடியும் என்ற கேள்வி கேட்கப்படலாம். "பாவ நிவாரண பலியுடன் சேர்த்தல்" என்ற சொற்றொடருக்கு என்ன கருத்து அடங்கியிருக்கிறது என்பதை பொறுத்தே நமது பதில் இருக்கும். பாவ நிவாரண பலிக்கு எதுவும் தேவைப்படவில்லை. பாவம் செய்த மனிதன் ஆதாம். அவரை இரட்சிப்பதற்காக நமது கர்த்தர் தமது மகிமையை விட்டு விட்டு ஆதாமை மீட்கும்படியாக மனிதனானார். பாவம் செய்த ஒரு பூரண மனிதனுக்காக ஒரு பூரண மனிதனின் ஜீவன் கொடுக்கப்பட்ட போது, அது நிறைவை பெறுகிறது அல்லது அதை வேத வாக்கியங்கள் மீட்கும் பொருளின் விலைக்கிரயம் என்று கூறுகிறது.

"மீட்கும் பொருள்" என்ற இந்த வார்த்தை (1 தீமோத்தேயு 2:6) கிரேக்க மொழியில் ஆன்டி லூட்ரான் **(Anti Lutron)** என்று வருகிறது. அதற்கு சரிசமமான ஒரு விலை. ஒரு ஈடான விலை என்று பொருள். நமது கர்த்தர் மீட்கும் பொருளை கொடுத்ததினிமித்தமாக அதனுடன் எதையும் சேர்க்க வேண்டிய அவசியமில்லை. எதையும் சேர்க்கவும் முடியாது. அது முன்னரே நிறைவடைந்ததால் அதனுடன் எதையும் சேர்க்க முடியாது. ஒரு பொருளின் விலை ஒரு டாலர் என்றால் அதோடு நீங்கள் 25 பென்னியை சேர்த்தால், அதன் விலையில் நீங்கள் எதையும் சேர்க்கப் போவதில்லை. ஏனெனில் அதன் விலை ஒரு டாலர் தான். அதோடு ஒரு டாலரை சேர்த்தால் எந்த விதத்திலும் அதனால் எந்தவித பலனுமில்லை, அவசியமுமில்லை.

இன்னொரு பொருளில், சபையானது கர்த்தருடன் பங்கு பெறுகிறது. நமது கர்த்தர் உலகத்தின் மீட்கும் பொருளாக மாத்திரமல்ல, அவர் மிகவும் மேலாக உயர்த்தப்பட்டு, தெய்வீக சுபாவத்தை பெறுவதற்கு அவர் மரிக்க வேண்டியது அவசியமாக இருந்தது. ஆகையால் அவரது மரணம் இரண்டு காரியங்களுக்கு பலனானது. முதலாவது அது மனுக்குலத்திற்கு மீட்கும் பொருள்; இரண்டாவது, இதனிமித்தம் தான் மகிமையின் பரிசாகிய தெய்வீக சுபாவத்தை அடையக்கூடும். அவர் மரணபரியந்தம் கீழ்ப்படியாதிருந்திருந்தால் அவர் எல்லாவற்றிற்கும் மேலாக உயர்த்தப்பட்டிருக்க மாட்டார்.

அப்போஸ்தலர் கூறுவதாவது: "அவர் மனுஷ ரூபமாய் காணப்பட்டு, மரண பரியந்தம், அதாவது சிலுவையின் மரண பரியந்தமும் கீழ்ப்படிந்தவராகிய, தம்மைத்தாமே தாழ்த்தினார். ஆதலால் தேவன் அவரை எல்லாவற்றிற்கும் மேலாக உயர்த்தி, எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை தந்தருளினார்." (பிலிப்பியர் 2:8,9) அவரது மரண பரியந்தம் அவர் உடன்படிக்கைக்கு கீழ்ப்படியாமல் இருந்திருந்தால், உயர்ந்த ஸ்தானத்திற்கு அவர் உயர்த்தப்பட்டிருக்க முடியாது. அவரது பலியின் உடன்படிக்கையை நிறைவேற்ற தவறியிருந்தால் அவரது மகிமையான பரிசை அடைய தவறியிருப்பார். மேலும் மனுக்குலத்திற்கு மீட்கும் பொருளாக இருப்பதிலும் தவறியிருப்பார். ஆனால் அவர் தவறவில்லை. அவர் "பரம அழைப்பின்" பந்தயப் பொருளை, தெய்வீக சுபாவத்தை அடைந்து விட்டார்.

எனினும் தேவனுடைய திட்டத்தில, சரீரத்தின் தலையும் சபையின் தலையுமாகிய இயேசுவைப் போல சபையும் ஓர் ஏற்பாட்டில் இருக்கிறது. நாம் தேவனால் முன்னறியப்பட்டிருக்கிறோம் என்று அப்போஸ்தலர் கூறுகிறார். (ரோமர் 8: 28-30; எபேசியர் 1:4,9-12) உங்களையும் என்னையும் அவர் தனித்தனியாக முன்னறியாமல் ஒரு சபையை, ஒரு வகுப்பாரை முன்னறிந்தார். ஆரம்பத்திலிருந்தே அப்படிப்பட்ட ஒரு வகுப்பாரை, ஒரு சபையை கூட்டிச் சேர்க்க அவர் முன்கூட்டியே திட்டமிட்டிருந்தார். இயேசு இந்த காரியங்களை செய்ய வேண்டும் என்பது ஆதியிலிருந்தே தெய்வீக திட்டமாக இருந்தது போல கிறிஸ்துவின் சரீரமாகிய ஒரு சபையை, அவரது அடிச்சுவட்டில் நடக்கவும், அவரோடு மரிக்கவும், தங்கள் சரீரங்களை ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கவும் தெய்வீக திட்டத்தின் ஒரு பகுதியாக இருக்கிறது. இயேசுவுக்கும் சபைக்கும் வித்தியாசம் என்னவென்றால் அவர் பூரணரும், பரிசுத்தரும், குற்றமற்றவரும், மாசில்லாதவரும் பாவிகளுக்கு

விலகினவருமாயிருந்தார். ஆகையால் அவரது மரணம் மீட்கும் பொருளாக இருக்க முடிந்தது. இவை அனைத்தும் தேவையாயிருந்தது. அப்படிப்பட்ட பூரணம் நம்மிடம் இல்லை. ஆகையால் நாம் பலி செலுத்த அனுமதிக்கப்படுவதற்கே அவரது பலியின் புண்ணியம் நமக்கு சாட்டப்பட வேண்டும். அப்பொழுது தான் நமது பலி கர்த்தரின் பலிபீடத்தில் பிரியமானதாக இருக்கும்.

பிறகு இந்த பலிகளை பலிபீடத்தில் வைக்கப்படுவதின் நோக்கம் என்ன என்ற கேள்வி எழுகிறது. அப்போஸ்தலர், "அப்படியிருக்க சகோதரரே, நீங்கள் உங்க சரீரங்களை பரிசுத்தமும் தேவனுக்கு பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக் கொடுக்க வேண்டும் என்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக் கொள்ளுகிறேன்; இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை" என்று கூறுவது போல, சபையும் அதன் கர்த்தருடன் கூட ஏன் பலிபீடத்தில் இருக்கிறது. கிறிஸ்துவின் பலியே அகில உலகத்தின் பாவத்திற்கும் போதுமான மீட்கும் பொருளாக இருக்கும் போது தேவன் நம்மை ஏன் கிறிஸ்துவுடன் ஜீவ பலியாக அழைக்கிறார்? பிதாவானவர், கிறிஸ்துவின் மகிமையில் பங்கு பெறத்தக்கதாக, நம்மை உள்ளே வந்து கிறிஸ்துவின் பாடுகளில் பங்கு பெற வேண்டும் என்று அழைக்கிறார். ஏனெனில் "அவரோடு கூட பாடுகளை சகித்தோமானால் அவரோடு ஆளுகை செய்வோம்." "அவரோடு கூட மரித்தோமானால் அவரோடு கூட பிழைத்தும் இருப்போம்."

நமது கர்த்தர் பலி கொடுக்க அழைக்கப்பட்டது போல, சபையும் அழைக்கப்படுகிறது. அவர் பாத்திரராக காணப்பட்டால், பிதாவானவரின் உயர்ந்த அங்கீகாரத்தை பெற்றால், அவர் பிதாவிடம் முன்னிருந்த மகிமைகளை விட்டுவிட்டு, தேவன் விரும்பினவைகளை வல்லமையோடு செய்ய வேண்டும். அப்படிச் செய்வதின் மூலமே வைக்கப்பட்டிருக்கிற பரிசை பெற முடியும். சுவிசேஷ யுகத்தில் அவருடன் உடன்படிக்கைக்குள் வரும்படி சபையானது அழைக்கப்படுகிறது. சுபாவத்தின்படி பாவிகளாகவும், மற்றவர்களைப் போல கோபாக்கினையின் பிள்ளைகளாகவும் இருந்த நம்மை அவருடைய புண்ணியத்தினால் நீதிமான்களாக்கி, அவருடைய பாடுகளிலும் அவரது பலியிலும் பங்கும் பெறும்படி செய்திருக்கிறார்.

இவைகளினால் என்ன பலன்? ஏன் இது செய்யப்பட வேண்டும்? அவரோடு கூட ஆவிக்குரிய தளத்தில் இருக்க அது ஒன்று தான் வழி. நாம் மாம்சீக சுபாவத்தை தக்க வைத்துக் கொண்டால் பரலோகத்தை அடைய முடியாது. பலியின் வகுப்பில் இல்லாத யாரும் பரலோகத்துக்கு செல்லவே முடியாது. பரத்திலிருந்து ஜெனிப்பிக்கப்படாதவர்கள் பரலோக ஆசீர்வாதத்தில் பங்கு பெற முடியாது. அவர்களுக்கு ஏதாவது கிடைக்குமானால், அது பூமிக்குரிய ஆசீர்வாதமாகத் தான் இருக்கும். அவர்கள் தங்களது பூமிக்குரிய சுபாவத்தை வைத்துக்கொண்டு, ஏற்ற காலத்தில் பூரணமடைவார்கள். ஆனால் கிறிஸ்துவின் மணவாட்டியாக ஆகும்படி இப்பொழுது அழைக்கப்படுகிறவர்கள் அவரது பலியிலும் இணையும்படி அழைக்கப்படுகிறார்கள். நமது கர்த்தர் தமது பூமிக்குரிய சுபாவத்தையும் அதன் உரிமைகளையும் பலியிட்டார். இந்த மணவாட்டி வகுப்பில் சேர விரும்புகிறவர்கள் மாம்சம், பூமிக்குரிய சுபாவம் அதன் உரிமைகள் முதலானவைகளை பலியிட வேண்டும். அதன் மூலம் அவர்கள் பரலோக, தெய்வீக சுபாவத்தில் அவருடன் பங்குதாரராக இருப்பார்கள்.

**R4856**

## RETRIBUTIVE DISCIPLINE OF THE MILLENNIUM
## ஆயிரம் வருட யுகத்தின் தண்டிக்கத்தக்க ஒழுக்கம்

தெய்வீக நீதியை பொறுத்தவரை மனுக்குலத்திற்கு எதிரான சகல நீதிக்குரிய காரியங்களும் இந்த சுவிசேஷ யுகத்தின் முடிவில் தீர்வு செய்யப்பட்டு முடிக்கப்படுவதே தெய்வீக ஏற்பாடாக இருக்கிறது. இது அடையாளமான பாவ நிவாரணத்தில், பாவங்களுக்கான மீட்கும் பொருளில் குறிப்பிடப்படுகிறது. மெய்யான பாவ நிவாரண நாள் கிறிஸ்துவின் பலிகளையும் அவரது சரீரத்தின் அங்கங்களாக ஆவதற்கு தகுதிப்படுத்துவதற்காக ஆயத்தங்களை சாட்சிப்படுத்துகிறது. அந்த மீட்கும் பொருளை நீதி ஏற்றுக் கொள்ளும் போது, அது குற்றங்களை நீக்கி ஆதாமையும் அவரது இனத்தார் அனைவரையும் விலக்கப்பட்ட கனியை புசித்து தேவனுடைய பிரமாணத்தை மீறினதினால் வந்த அனைத்து பொறுப்புகளிலிருந்தும் விடுவிக்கிறது. இயேசுவின் மரணம் தான் ஆதாமின் ஆதி பாவங்களுக்கான மீட்கும் பொருளாக இருக்கிறது.

ஆனால் அப்பட்டமான தவறுகள் போன்ற பாவங்களும் இருந்திருக்கின்றன. பரிசுத்த ஆவிக்கும், வெளிச்சத்துக்கும் எதிரான பாவங்களுக்கு நீதியானது தண்டனையை கோருகிறது. இவையனைத்தும் தேவனுக்கும் நீதிக்கும் விரோதமான பாவம். இதை விளக்க கர்த்தருடைய அனுபவங்களை கவனியுங்கள்; நம்முடைய கர்த்தருடைய சிலுவை மரணத்திற்கு ஒழுங்கீனமான கும்பல் காரணமல்ல. ஆனால் இன்னும் மேன்மையானதை செய்யக்கூடிய போதுமான வெளிச்சம் பெற்ற தனி நபர்கள் இருந்தார்கள். ஆகையால் ஆபேலின் காலத்திலிருந்து தற்காலம் வரை சிலர் அநியாயமாக பாடுபட்டார்கள். அநியாயமாக பாடுபட்ட இவர்களின் சத்தம், ஆபேலின் இரத்தத்தின் சத்தத்தைப் போல தேவனிடம் சென்றது. ஆசீர்வாதத்தின் மகா நாள் திறப்பதற்கு முன்பும், ராஜ்யத்தின் மத்தியஸ்தர் கையில் உலகமானது முழுவதுமாக திரும்புவதற்கு முன்பும் எப்படி மீட்கும் பொருள் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை வேத வாக்கியங்கள் நமக்கு காண்பிக்கிறது.

வேண்டுமென்றே செய்த இந்த பாவங்களுக்காக மீட்கும் பொருள் போக்காட்டின் சித்திரத்தினால் காண்பிக்கப்படுகிறது. அங்கே திரள் கூட்டமானது எப்படி மகா உபத்திரவத்தின் வழியாக செல்லும் என்பதை நிழலில் நாம் பார்க்கிறோம். அது அவர்கள் மேல் நல்ல பலனைக் கொடுக்கும். அதே சமயம் அது ஆதாமின் பாவத்திற்கு வெளியே நீதியின் மீறுதல்களுக்கான தண்டனையாகவும் இருக்கும். பிரதான ஆசாரியரின் கைகளை போக்காட்டின் தலையின் மீது வைப்பது, இந்த பாவங்களை திரள் கூட்டத்தாரின் மேல் வைத்து மகா உபத்திரவத்துக்குள் அனுப்புவதை சித்தரிக்கிறது, யூத தேசத்தின் மேல் வரும் என்று நமது கர்த்தர்

முன்னுரைத்தபடியும், இது நிஜமாகவே அது நிறைவேறினது போலவும் இதற்கொப்பான ஒரு அனுபவம் திரள் கூட்டத்தார் மேல் கடந்து செல்லும். யூத யுக முடிவில் இந்த பயங்கரமான பாடுகள், தெய்வீக நீதிக்கு எதிரான பாவங்களுக்கான அதாவது முற்காலத்தில் செய்த தவறான செயல்பாடுகளுக்கான சரிகட்டுதல் என்று நமது கர்த்தர் கூறுகிறார். (லூக்கா 11 :49-51) இது ஆயிரம் வருட யுக ஆரம்பத்தில் நீதியின் புத்தகத்தில் உலகத்திற்கு எதிராக குற்றங்கள் எதுவும் இல்லாதபடி செய்யும்.

## முந்தைய குணலட்சண அபிவிருத்திக்கு ஏற்றவாறு ஒழுங்குகள்

நீதியானது மனுக்குலத்தின் முழு உலகத்தையும் மேசியாவின் கைகளில் மாற்றி விடும். அவர்களை அவர் அப்படியே எடுத்துக்கொள்ளுவார். அவர்கள் பல்வேறு நிலைமைகளில் இருப்பார்கள். சிலர் மிகவும் சீரழிந்த நிலையிலும், சிலர் குறைவாக சீரழிந்த நிலையிலும் இருப்பார்கள். சிலருடைய மனசாட்சி மிகவும் வாடிப்போன நிலையிலும் சிலர் குறைவான வாடிப்போன நிலையிலும் இருப்பார்கள். குணலட்சணத்தின் இந்த குறைபாடுகள், ஒவ்வொருவரும் தற்காலத்தில் வெளிச்சத்தையும் சந்தர்ப்பத்தையும் ஏற்றுக்கொண்டிருக்கிற அல்லது நிராகரித்திருக்கிற வழியை சார்ந்திருக்கும். அவரது சித்தத்தை அறியாதவர்களாயிருந்து அதன்படி செய்யாதவர்கள் சில அடிகளை பெறுவார்கள். அவரது சித்தத்தை அறிந்து அதன்படி செய்யாதவர்கள் அநேக அடிகளை பெறுவார்கள். காரணம் அவர்களது முந்தைய கடினமான குணலட்சணம், ஒவ்வொருவரும் முடிவில் தெய்வீக தேவையின் முழு தரநிலையின் அளவுக்கு வரவேண்டிய அவசியத்தில் இருப்பார்கள். அதிகமாக சீரழிந்த நிலையில் இருப்பவர்கள் அதிக கஷ்டங்களையும் குறைவாக சீரழிந்தவர்கள் குறைவான கஷ்டங்களையும் பெறுவார்கள். இவர்கள் தெய்வீக தேவைக்கு வருவதற்கு குறைவான அடிகளைப் பெறுவார்கள். வேறு வார்த்தையில் சொல்லுவோமானால், செயல்படுத்தப்பட்ட ஒவ்வொரு தவறான செயலும் குணலட்சணத்தில் தீமையான விளைவை ஏற்படுத்தும். சகல நல்ல காரியங்களும் ஆசீர்வாதத்தை கொண்டு வரும். ஆகையால் மனுக்குலம் இந்த வாழ்க்கையில் சலுகைக்கு கீழ்ப்படிந்து அல்லது கீழ்ப்படியாமல் போனது அல்லது அவர்கள் பெற்ற அறிவு, புரிந்து கொண்டவைகளுக்குத்தக்கதாக அவர்கள் அடுத்த யுகத்தில் நுழையும் போது உயர்த்தப்படுவார்கள் அல்லது தாழ்த்தப்படுவார்கள்.

தேவன் மனிதர்களைப் போல மந்தமாக இருக்கவில்லை. ஆனால் பொறுமையுடன் நீடிய பொறுமையுடன் இருக்கிறார் என்று அப்போஸ்தலர் கூறுகிறார். (2பேதுரு 3:9) மறுபடியும் நாம் வாசிக்கிறதாவது; "கர்த்தர் அக்கிரமக்காரரை ஆக்கினைக்குள்ளானவர்களாக நியாயத்தீர்ப்பு நாளுக்கு வைக்கவும் அறிந்திருக்கிறார்." (2 பேதுரு 2:9) மறுபடியும் நாம் வாசிக்கிறதாவது: "சிலருடைய பாவங்கள் வெளியரங்கமாயிருந்து, நியாயத்தீர்ப்புக்கு முந்திக்கொள்ளும்; சிலருடைய பாவங்கள் அவர்களைத் தொடரும்." (1தீமோத்தேயு 5:24) அதாவது சிலர் தவறுகளை செய்து, அவர்களது தவறான மார்க்கத்திற்கான தண்டனையை உடனடியாக பெறுகிறார்கள் என்று இது கூறுகிறது. இப்படியாக அவர்கள் முந்தைய வாழ்க்கையைக் காட்டிலும் முன்னேற வாய்ப்பைப் பெறுவார்கள்.

சிலர் நன்றாக இருப்பதாக தெரிகிறது; பூமிக்குரிய காரியங்களில் செழிக்கிறார்கள். அவர்களது கண்கள் கொழுப்பினால் எடுப்பாய் பார்க்கிறது. அவர்கள் மரண பரியந்தம் அவர்களது தவறான மார்க்கம் கவனிக்கப்படாமல் போகிறதாக தெரிகிறது. (சங்கீதம் 73:3-12) இவர்கள் தப்பிப்பார்களா? "இல்லை" என்று நாங்கள் பதிலளிக்கிறோம். நியாயத்தீர்ப்பின் நாளில் அவர்களுக்குரிய பாடத்தை அவர்கள் பெறுவார்கள். தற்கால வாழ்க்கையின் துன்பங்கள் மூலமாக பாடங்களைக் கற்றுக்கொண்டவர்களைக் காட்டிலும் அச்சோதனை நாளில் அவர்களது துன்பம் அதிகமாக இருக்கும். தீமையை அப்பியாசப்படுத்தினவர்களுக்கு, கடந்த கால வழக்கங்கள் அனுமதிக்கப்படாது என்பதை கற்று கொள்ளுவதற்கு முன்பாக தீவிரமான ஒழுங்குகள் தேவைப்படுகிறது. இந்த புதிய ஒழுங்கு எதையும் மறைக்க அனுமதிக்காது. ஆகையால் இந்த வாழ்க்கையில் தகுந்த தண்டனையை பெறுவார்கள். அதாவது இதுவே அவனது தவறான நிலைமைக்கான பலனாக இருக்கும்.

சில குழந்தைகள் அவமானமாக இருக்கக்கூடிய ஒரு அடையாளத்தை உடையவர்களாக பிறந்திருப்பதை நாம் அனைவரும் பார்த்திருக்கிறோம். அவமதிப்பான வார்த்தைகள அவர்கள் மேல் வருகிற காரணத்தால் அவர்கள் தாழ்ச்சி உடையவர்களாகவும் அழகான குணமுடையவர்களாகவும் ஆகிறார்கள். மறுபுறம் தங்கள் சொந்த வழியில் ரம்பத்தையும் அரத்தையும் உடைய கெட்டுப்போன குழந்தைகள் இந்த உலகில் மற்றவர்களுக்கு கஷ்டத்தை கொடுக்கக்கூடியவர்களாக இருக்கிறார்கள். இவர்கள் தற்கால வாழ்க்கையில் சுய கட்டுப்பாடு என்கிற பாடங்களை கற்றுக்கொள்ளவில்லை. இது எதிர்காலத்தில் அதற்கேற்றாற் போல் தீமையாக இருக்கும். இந்த பாடங்களை அவர்கள் கற்க வேண்டும்.

மோசேயின் பத்து கட்டளைகள் மேசியாவின் ராஜ்யத்தில் புத்துயிர் பெறுமா என்ற கேள்வி கேட்கப்படுகிறது. அது ராஜ்யத்தின் பிரமாணமாக இருக்கக்கூடாது என்பதற்கான காரணம் எதையும் நாங்கள் காணவில்லை. நியாயப்பிரமாணத்தில் தவறு ஏதும் காணப்படவில்லை. ஆனால் நியாயப்பிரமாணத்திற்கு கீழாக இருந்தவர்கள் பலவீனமும் இயலாமையும் உடைவர்களாயிருந்தார்கள். பத்துகட்டளைகள் புது சிருஷ்டிக்கு கொடுக்கப்படவில்லை. ஆனால் அவர்களது ஆவி புது சிருஷ்டியின் பிரமாணமாகிய அன்பு என்ற வார்த்தையில் புரிந்துகொண்டது. (ரோமர் 13:8-10) அதை சபைக்கு சொல்வது கர்த்தருக்கு பொருத்தமற்றதாக இருக்கும். களவு செய்யதிருப்பாயாக, கொலை செய்யாதிருப்பாயாக, இப்படிப்பட்ட ஒவ்வொரு மன நிலைமையையும் கடந்து தான் அவர்கள் கர்த்தருடையவர்களாக ஆகியிருக்கிறார்கள்.

புது யுகத்தின் ஆரம்பத்தில் உலகத்திற்கு ஒவ்வொருவரையும் அன்பு செலுத்த வேண்டும் என்பதே அவர்களுக்கு கொடுக்கப்படுகிற கட்டளையாக இருக்கும். அவர்களுக்கு சில சாதாரண அறிக்கைகள் தேவைப்படும். என்னைத் தவிர வேறு தேவர்கள் உங்களுக்கு இருக்கக்கூடாது. திருடக்கூடாது; கொலை செய்யக்கூடாது; பொய் சாட்சியை கேட்கக்கூடாது போன்றவைகளாகும். பத்து கட்டளைகள் உலகத்தின் மனுக்குலத்திற்கு மிகவும் சிறந்த கட்டளையாகும். ஆரம்பத்தில் மோசேக்கு இந்த பிரமாணத்தை கொடுத்தவரின் ஞானத்தை நம்மால் மேம்படுத்த முடியாது. ஆகையால் பத்து கட்டளைகள் யூதர்கள் மேல் வைக்கப்பட்டது போல முழு உலகத்தின் மேல் வைக்கப்பட்டால் அதில் நமக்கு ஆச்சரியம் ஏதுமில்லை. நியாயப்பிரமாணத்தின் ஆவி அன்பு என்று மனுக்குலத்திற்கு காண்பிக்கப்படும். அவர்கள் இந்த நியமத்தின் புரிந்துகொள்ளுதலுக்கு படிப்படியாக வருவார்கள். ஏனெனில் ஆரம்பத்தில் காரியத்தை அவர்கள் சரியாக உணர்ந்து கொள்ளவில்லை.

# DESTROYING GOD'S WORD
# தேவனுடைய வார்த்தையை அழித்தல்

எரேமியா 36

"நமது தேவனுடைய வசனமோ என்றென்றைக்கும் நிற்கும்." ஏசாயா 40:8

தீர்க்கதரிசி எரேமியா சிறையில் அடைக்கப்பட்டார். ராஜ்யத்தின் அழிவு கொஞ்ச அளவுக்கு நிறைவேறியது. அதனால் ஜனங்கள் கொஞ்சம் மனம் வருத்தம் அடைந்தனர். இதனுடன் ராஜாவும் இணைந்து கொண்டான். ஆனால் அது பயத்தினால் ஏற்பட்ட வருத்தமேயல்லாமல் செய்த குற்றத்திற்கான மனவருத்தம் அல்ல. தேவ செய்தி எரேமியா மூலம் வந்ததால் ராஜா எரேமியாவிடம் பகைமை கொண்டான். மேலும் அழிவைப் பற்றிய அறிவிப்பு தீர்க்கதரிசியிடமிருந்து வராதபடிக்கு அவரைத் தடுத்தான். எனினும் கர்த்தர் தீர்க்கதரிசியிடம் அவரது அனைத்து தீர்க்கதரிசனங்களையும் ஒரு புத்தகச் சுருளில் பழங்கால முறைப்படி எழுதச் சொன்னார். எரேமியா வாயால் சொல்லச் செல்ல பாருக்கு என்பவன் புத்தகச் சுருளில் எழுதினான்.

கர்த்தரால் சொல்லப்பட்ட இந்த புத்தகச் சுருள் எல்லா ஜனங்களும் கேட்கும்படியாக ஆராதனைக்காகவும் மனந்திரும்புதலுக்காகவும் கூடும் போது வாசிக்கப்பட வேண்டும். தீர்க்கதரிசி போகமுடியாதிருந்ததால், அவர் பாருக்கை அழைத்து அந்த புத்தக சுருளை எடுத்துச் சென்று தேவாலயத்தில் எல்லா ஜனங்களும் கேட்கும்படி வாசிக்கச் சொன்னார். அழிவைப் பற்றிய அந்த தீர்க்கதரிசனம் ஆழ்ந்த உணர்வை ஏற்படுத்தியது. ஜனங்களின் பிரபுக்களில் ஒருவன் அங்கு இருந்து அந்த தீர்க்தரிசனங்களை கேட்டு ராஜா சபையின் ஆலோசனைக்காரர்களிடம் கூறினான். அவர்கள் பாருக்கை அழைப்பித்து அதை தங்கள் அனைவருக்கும் முன்பாகவும் வாசிக்கும்படி கூறினார்கள். அவர்களும் அதைச் கேட்டு மிகவும் பயமுற்றவர்களாய் அதை ராஜாவிடம் கொண்டு செல்ல வேண்டும் என்று தீர்மானித்தார்கள். ஆனால் இதற்கிடையில் பாருக்கும் எரேமியாவும் ஒளித்து வைக்கப்பட்டார்கள். ராஜாவின் கோபம் அதிகமாக இருந்தது.

அந்த புத்தகச் சுருளை ஒரு வேதபாரகனை ராஜா தனக்கு முன்பாக வாசிக்கும்படி கூறினான். அந்த பிரதியை வாசிக்கும் போது, இரண்டு அல்லது மூன்று பத்திகளை வாசித்துக் கொண்டிருக்கும் போது ராஜா அதை கத்தியினால் வெட்டி நெருப்பில் போட்டான். முழு புத்தகச் சுருளும் நெருப்பில் வெந்து போனது. தேவனுடைய கட்டளைப்படி எரேமியா மறுபடியும் சொல்லச் சொல்ல பாருக்கு ஒரு வேதபாரகனாயிருந்து அதை எழுதினான். இந்த பிரதி முந்தினதைக் காட்டிலும் இன்னும் முழுமையாக செய்யப்பட்டது. அதில் மற்றவைகளோடு யோயாக்கீமின் வம்சத்தில் தாவீதின் சிங்காசனத்தில் உட்காரும்படி ஒருவனும் இரான் என்கிற தேவ கட்டளையும் சேர்க்கப்பட்டது.

## தேவனுடைய வசனம் அழிக்க இயலாதது

தாமஸ் பெயின், வால்ட்டர் மற்றும் இங்கர்சால் ஆகியோர் தேவனுடைய வசனம் அபத்தமாக காணப்படுகிறது என்றும் அது மனிதரிடையே செல்வாக்கை பெறாது என்றும் கற்பனை செய்தார்கள். ராபர்ட் இங்கர்சால் கூறியதாவது: "பத்து வருடங்களில் வேதாகமம் வாசிக்கப்படாது." அந்த அற்பமான மனிதன் வேதத்தை எப்படி அறியாதிருந்தான் பாருங்கள்!

பிரசித்தமான வைக்ளிப் பைபிளின் முற்பகுதி சாத்தான் மற்றும் மற்றவர்கள் மத சம்பந்தமான மற்றும் மத சம்பந்தமற்ற காரியங்களுக்கு தங்களால் முடிந்தவரை வெளிச்சத்தை காட்டியிருக்கிறார்கள். அவர்கள் தங்களது சக்தியை பயன்படுத்தின அளவுக்கு வெளிச்சம் இன்னும் அதிகமாக பிரகாசத்தைக் கொடுத்தது.

டின்டேல் வேதாகமம், தேவனுடைய வார்த்தையை அழிக்க முடியாது என்று நாம் சொல்லுகிறதையே விளக்குகிறது. டின்டேல் இங்கிலாந்தில் உள்ள கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் இருக்கும் போது தமது முழு சக்தியையும் வேதாகம மொழிபெயர்ப்பில் பயன்படுத்தினார். அவர் விரோதிகளிடம் குறிப்பிட்டதாவது: "தேவன் என் வாழ்க்கையை விட்டிருந்தால் நான் பல வருடங்களுக்கு முன்பே ஏர் உழும் ஒரு பையனை உங்களைக் காட்டிலும் அதிகமாக வேத வாக்கியங்களை அறியும்படி செய்திருப்பேன்."

வேதாகமத்தை ஆங்கிலத்தில் வெளியிடும் டின்டேலின் திட்டத்திற்கு இங்கிலாந்தில் தீவிரமான எதிர்ப்பு இருந்தது. ஆகையால் அந்த திட்டத்தை ஜெர்மனுக்கு எடுத்துச் சென்று 1525இல் புதிய ஏற்பாட்டின் அவரது மொழி பெயர்ப்பை வெளியிட்டார். அபரிதமிதமான பிரதிகள் இங்கிலாந்திற்கு அனுப்பப்பட்டன. லண்டன் பிஷப் அவரால் முடிந்த அளவுக்கு அநேக பிரதிகளை வாங்கி பரி. பவுலின் கிராஸில் **(St. Paul's Cross)** தீயிலிட்டு எரித்தார். இன்னும் அநேக பிரதிகள் வந்தன. அவர் அவைகளை அழிக்க முடியவில்லை. அவர் அனைத்து பிரதிகளையும் வாங்குவதற்கு பணத்தை வசூலித்தார். அவற்றை வாங்கும் வேலை பார்க்கிங்டன் என்ற வியாபாரியிடம் கொடுக்கப்பட்டது. அவர் ஜெர்மனி சென்று அனைத்து பிரதிகளையும் வாங்கினார்.

டின்டேலிடம் அவர் கூறியதாவது: "வில்லியம், நீங்கள் ஏழையாக இருக்கிறீர்கள். அதிகமாக புதிய ஏற்பாடுகளை வைத்திருக்கிறீர்கள். நான் ஒரு வியாபாரியை ஏற்பாடு செய்திருக்கிறேன். அவர் பணத்தை ஏற்பாடு செய்து அனைத்து பிரதிகளையும் வாங்குவார்." டின்டேல் கேட்டார்: "யார் அந்த வியாபாரி?" "திரு. பார்க்கிங்டன்" என்று லண்டன் பிஷப் பதிலளித்தார். டின்டேல் கூறினதாவது: "ஓ! ஏனெனில் அவர் அவற்றை வாங்கி எரிப்பார்." "ஆம், அவர் அதைச் செய்வார்" என்று பிஷப் பதிலளித்தார். டின்டேல் மிகவும் சந்தோஷப்பட்டார். ஏனெனில் அவர் அதன்மூலம் தனது கடனை சரிக்கட்ட முடியும். அவர் கூறியதாவது: "தேவனுடைய வார்த்தையை எரிப்பதற்கு எதிராக உலகமானது கூக்குரல் இடும்." அதிலிருந்த கிடைத்த பணத்தினால் தவறுகள் இல்லாத சிறந்த திருத்திய மொழி பெயர்ப்பை வெளியிட்டார். அது எரித்ததைக் காட்டிலும் சிறந்ததாக இருந்தது.

## சிறந்த விளக்கங்கள் எதிர்க்கப்பட்டன

வேதகாமத்தை அழிக்க முயற்சிக்கிற நாட்களை நாம் கடந்து வந்திருந்தாலும். சத்தியத்தை எதிர்க்கிற காலத்தை

நாம் கடக்கவில்லை. வேதாகமத்தை ஆராய்ந்து அதன் கருத்துகளை உணர்ந்து கொள்ளுவதற்கு பதிலாக, தேவனுடைய பிள்ளைகளை அதை ஆராதிக்கும்படி சாத்தான் மயங்கச் செய்வான். அதன் பலனாக தேவனுடைய வார்த்தையிலிருந்து தற்போது பிரகாசிக்கிற வெளிச்சத்தை சிலர் மாத்திரம் எதிர்க்காமல், இருண்ட காலத்தில் வந்த அநேக காரியங்கள் வேதாகமத்திற்கு எதிராக இருக்கிறது என்று நமக்கு வெளிப்படுத்துகிறார்கள். சபையின் பெரும்பாலான வெளிப்படையான ஆசிரியர்கள் வேதாகம ஆராய்ச்சிகளை இருதய பூர்வமாக எதிர்க்கிறார்கள். அதையும் கூட மிக ஜாக்கிரதையாக முன்னரே ஜனங்களுக்கு பயப்படுவதினால் எதிர்க்கிறார்கள். அதாவது யூதர்களுக்கு பயப்படுவதினால்.

தேவனுடைய வார்த்தையானது இந்த சுவிசேஷ யுகத்தின் முடிவுவரை அதிகமதிமாக பிரகாசிக்கும் என்பதை நாம் புரிந்து கொள்ளும்படி வேத வாக்கியங்கள் ஆரம்பம் முதல் முடிவு வரை நமக்கு கொடுக்கிறது. “அதிக உறுதியான தீர்க்கத்தரிசன வசனத்தை இருளுள்ள ஸ்தலத்தில் பிரகாசிக்கிற விளக்கைப் போன்று பொழுது விடியும் வரை கவனித்திருப்பது நலமாயிருக்கும்.” (2 பேதுரு 1:19)

லண்டனைச் சேர்ந்த பிஷப், டின்டேலின் மொழி பெயர்ப்பை எதிர்த்தார். ஏனெனில் கால நடைமுறைகள் வேத வாக்கியங்களோடு இசைவாக இருக்கவில்லை. இன்றைக்கும் கூட இருண்ட காலத்தின் போதனைகள், பாரம்பரியங்கள், விசுவாச அறிக்கைகள் இன்னும் மதிக்கப்படுகின்றன. வேதாகமத்தை சரியாக புரிந்து கொண்டால் அது வெட்கத்துக்குரியது என்பதை தெரிந்து கொள்ளுவோம். ஆதலால் தான் தேவனுடைய வார்த்தையை சரியானபடி புரிந்து கொள்ளுதல் எதிர்க்கப்படுகிறது. எனினும் தேவனுடைய வார்த்தை என்றென்றைக்கும் நிற்கும். சத்திய ஆவி சத்தியத்தின் பிள்ளைகள் அனைவரையும் உண்மையிலே விடுவிக்கும்.

“வேதம் மண்ணோடு நசுக்கப்பட்டாலும், மறுபடியும் எழும்பும்;
தேவனுடைய நித்திய காலங்கள் அதனுடையது.”

R4858

## THE PROPERIETY OF FASTING
## உபவாசத்தின் ஒழுங்கு

“நீங்கள் உபவாசிக்கும் போது மாயக்காரரைப் போல முகவாடலாயிராதேயுங்கள்.” மத்தேயு 6:16

நமது வசனத்தில் நமது கர்த்தர் உபவாசத்தை குறித்து மறுத்து எதையும் கூறவில்லை. மாறாக, அது ஒரு உரிமை என்று ஆதரிக்கிறார். திருப்தியாக சாப்பிடுவதற்கு பதிலாக சில சமயங்களில் உபவாசம் இருப்பது நமது உடல் நலத்துக்கு நல்லது. வசனத்தின்படி பரிசேயரின் தவறான நடத்தைப் பற்றிய நமது ஆண்டவரின் கருத்தாக தெரிகிறது. உபவாசம் என்பது சரீர உடல் நலத்திற்கு மாத்திரமல்ல, மனநலம் மற்றும் ஆவிக்குரிய நலத்திற்கும் நல்லது. தங்களை பரிசுத்தவான்களாக கூறிக்கொள்ளுகிற பரிசேயர்கள் மாம்சத்தை கீழ்ப்படுத்தி, அதன் மூலம் ஆவிக்குரிய பலம் பெற உபவாசத்தின் மூலம் தங்களது பரிசுத்தத்தை வெளிப்படுத்துகிறார்கள்.

அப்படிப்பட்ட ஒரு செயல்பாட்டின் உரிமையைக் குறித்து நமது கர்த்தர் வாதம் செய்யவில்லை. அவர் கண்டித்தது தவறான ஆவியைக் குறித்து ஆகும். ஏனெனில் பரிசேயர்கள் உபவாசித்த போது, அவர்களில் பெரும்பாலானோர், தாங்கள் பரிசுத்தமுள்ளவர்கள், ஆவிக்குரிய காரியங்களுக்காக ஒப்புக் கொடுத்தவர்கள் என்று தெரியும்படியாக அநேகர் பார்க்கும்படி உபவாசம் செய்தார்கள். ஆகையால் நமது கர்த்தர் தமது சீஷர்களுக்கு மாயக்காரனைப் போல உபவாசம் இருக்கக்கூடாது என்று கூறினார். மாயக்காரரின் உபவாசமும் முகம் வாடலாக இருப்பதும் அவர்களது பக்தியை மற்ற மனிதர்களுக்கு காண்பிக்கவுமேயாகும். இது சம்பந்தமாகத்தான் நமது கர்த்தர், சீஷர்கள் உபவாசிக்கும் போது இதற்கு மாறாக இருக்க வேண்டும் என்று கூறுகிறார். அதாவது அவர்கள் தலையில் எண்ணெய் பூசி முடிந்தவரை உற்சாகமாக இருக்க வேண்டும் என்று கூறுகிறார்.

இந்த முறையின் தத்துவத்தை நாம் காணலாம். அவர்களது உபவாசம் அவர்களை பரம பிதாவிடம் நெருக்கமாக கொண்டு வந்திருந்தால், அது அவர்களை மிகவும் கிருபையுள்ளவர்களாகவும் பிரகாசிக்க கூடியவர்களாகவும் ஆக்கியிருக்கும். அது ஒரு சந்தோஷமான விளைவை கொடுத்திருக்கும். அது அவர்களது முகத்தோற்றத்திலேயே காண்பிக்கப்பட்டிருக்கும். மனிதர்கள் காண்பதற்காக முகத்தில் சோகத்தை காண்பித்த பரிசேயர்களின் பாசாங்குதனம் கண்டிக்கப்பட்டது. அவர்களைப் பற்றி ஜனங்கள் இப்படியாக சொல்லுவதில் சந்தோஷம் அடைகிறார்கள். “என்ன பரிசுத்தமுள்ள மனுஷன்! அந்த அளவுக்கு உபவாசம் இருக்கிறார்! அவர் பரிசுத்தமானவைகளையே சிந்தித்துக் கொண்டிருக்கிறார். அதற்காக இதை செய்கிறார். அவர்கள் தன்னைத்தான் வெறுக்கவும் வாழ்க்கைக்குரியவைகளை மறுக்கவும் செய்கிறார். அவர் மிகவும் பரிசுத்தமானவர்!”

கர்த்தரின் சீஷர்கள் கர்த்தர் காணும்படியும் மனுஷர்கள் காணாதபடியும் உபவாசம் இருக்க வேண்டும். நமது இருதயத்தை அறிகிற பிதாவானவர், நமது முயற்சிகளை புகழ்ந்து நம்மை அவரிடம் இழுத்து, நமது விருப்பத்தை அருளுவார். ஆனால் இந்த காரியங்கள் வெளி உலகத்திற்கு மறைக்கப்பட்டு தேவனுக்கு மட்டுமே தெரியும். கர்த்தரின் சந்தோஷம் முகத்தில் வெளிப்படுத்தப்பட வேண்டும்.

### இதயத்தின் பரிசுத்தம் வெறும் ஒரு வெளிப்புற அடையாளமல்ல

நமது கர்த்தர் பரிசேயர்களைப் பற்றி கூறும் போது. அவர்கள் அதிக செல்வாக்குள்ள வகுப்பார் என்று அடிக்கடி கூறுவார். ஆதலால் அவர்கள் பரிசுத்தமான ஜனங்கள் என்று அவர்களது நாமம் குறிப்பிட்டது. ஆகையால் நமது கர்த்தர், தேவனிடத்தில் அத்தியாவசியமான கீழ்ப்படிதலைக் குறித்து

போதிக்கும் போது அவர்களிடத்தில் இந்த கேள்வி எழுந்தது. "இவர் பரிசேயர் இல்லையா? இவைகளை பரிசேயர்கள் போதிக்கவே இல்லையே?"

ஆகவே, பரிசேயர்கள் செயல்படுத்தின காரியங்களில் சில அவர்கள் தேவனிடத்தில் விசேஷித்த விதமாக நெருங்கியிருக்கிறார்கள் என்பதற்கான ரூபகாரங்கள் அல்ல என்பதையும் அவர்கள் பரிசுத்தத்திற்கு வழி நடத்துகிறவர்கள் அல்ல என்பதையும், பெரும்பாலான பரிசேயர்கள் மாயக்காரர்கள் என்பதற்கு அது ரூபகாரமாக இருந்தது என்பதையும் காண்பிப்பது நமது கர்த்தராகிய இயேசுவுக்கு அவசியமாக ஆனது. அவர்களது பரிசுத்தம் வெறும் தோற்றமாக ஆகியிருந்தது. அது சீரழிந்த வழக்கமாகியிருந்தது. அவர்கள் உதடுகளால் கர்த்தரிடத்தில் நெருங்கி, இருதயத்திலோ அவரை விட்டு விலகியிருந்தார்கள். அவர்களது நினைவுகளெல்லாம் உலகத்தை குறித்தும், ஜனங்களைக் குறித்தும், பொதுவான மனோபாவத்தில் இருந்தனர் என்று வேதவாக்கியங்கள் கூறுகின்றன.

நிக்கோதேமு, அரிமத்தியா ஊரனாகிய யோசேப்பு (நமது ஆண்டவரை அடக்கம் பண்ணினவர்) தன்னை ஒரு பரிசேயன் என்று கூறிக்கொண்ட பரி. பவுல் போன்றோர் சில சிறந்த பரிசேயர்கள் இருந்தார்கள் என்று நாம் நினைவுகூருகிறோம். அவர்களில் பெரும்பாலோர் தங்கள் வேத வசனங்கள் எழுதப்பட்ட தோள் பையை அகலமாக்கினார்கள். மேலும் தங்களைப் பற்றி கர்த்தர் என்ன நினைக்கிறார் என்பதைக் காட்டிலும் மனிதர்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதில் மிகவும் ஆவலாய் இருந்தார்கள். பரிசேயர்களின் மாய்மாலமான காரியங்களில் சில அவர்கள் துறவு முறைமையை பின்பற்றுவது ஆகும். அவர்கள் உலகத்தை விட்டு பிரிந்திருப்பதாக காண்பிப்பதற்கு, விநோதமான ஆடைகள், விசேஷித்த விதமான முடி அலங்காரம், தனித்திருத்தல் முதலானவைகள் மூலமாக காண்பிக்க விரும்பினார்கள். லெந்து நாட்களில் சில கத்தோலிக்கர்கள், எபிகோபல் சபையார் மற்றும் லூத்தரன் சபையார் ஆசரிப்பது மிகவும் ஆபத்தானதாக இருக்கிறது. ஆனால் அதில் எல்லாவற்றிலும் பாசாங்கு இல்லாதிருக்கலாம்.

### லெந்து நாட்களில் உணவை குறைப்பது பிரயோஜனமானது

லெந்து நாட்களில் உபவாசம் இருக்கும் வழக்கத்தை கடைப்பிடிப்பது கர்த்தருடைய பிள்ளைகள் அனைவருக்கும் அநேக விதங்களில் மிகவும் சிறந்த காரியமாக இருக்கும். முடிந்தவரை வெளிப்படையாக தெரியாமல், யாருடைய கவனத்தையும் ஈர்க்காமல், ஒரு சலுகையாக எடுத்துக்கொண்டு கர்த்தருக்கு உபவாசிப்பது நல்லது. லெந்து நாட்களில் உணவை குறைப்பது சரியானதாக தெரிகிறது. குளிர் காலத்தின் குளிர் பசியைத் தூண்டுகிறது. அந்த பருவத்தின் குறைவான வெப்ப நிலையை எதிர்ப்பதற்கு அது தேவை. வசந்த காலத்தில் அந்த அளவுக்கு குளிர் இல்லாததால் குறைவான கார்போஹைட்ரேட் தேவைப்படும். ஆகையால் லெந்து நாட்களில் உபவாசத்தை அப்பியாசப்படுத்துவது மிகவும் பலமுள்ளதாக தெரிகிறது.

லெந்து நாட்கள் என்பது நமது கர்த்தர் சிலுவையில் அறையப்படுவதற்கு முன்பு நாற்பது நாட்கள் அவரது அனுபவங்களை குறிப்பதை நாம் மனதில் வைத்திருக்கிறோம். நாம் இந்த காரியத்தைக் குறித்து அனுதாபப்பட வேண்டும். ஆண்டவர் மேல் வந்த சோதனை அனுபவங்களை நாம் நினைக்க வேண்டும். அப்பொழுது அவர் தாம் மரணத்தை நெருங்கிக் கொண்டிருப்பதை அறிந்தவராயிருந்தார். நாம் அவரைப் பற்றி சிந்திக்க முயற்சித்தால், அவரது சத்தியத்தினிமித்தம் நல்ல போர்ச்சேவகர்களாக துன்பத்தை சகிப்பது எப்படிப்பட்ட சலுகை என்பதை நம்மை உணரச்செய்யும்.

கர்த்தருடைய பிள்ளைகள் தாங்கள் ஆவியில் குறைவுபடுவதாக காணும் போதும், உலகம், மாமிசம் மற்றும் பிசாசினால் தீவிரமான சோதனைக்குட்படும் போதும் உபவாசம் மிகவும் சிறந்ததாக இருக்கிறது. ஏனெனில் மாம்சீக சக்தியையும் உயிர்ச் சக்தியையும் பலவினப்படுத்துவதின் மூலம், முழு இரத்தமும், மனமும் எல்லா வழிகளிலும் சுய கட்டுப்பாட்டிற்கு உதவி புரியும். பெரும்பாலான கிறிஸ்தவர்கள் மிகவும் எளிமையான உணவு மூலமாக, முழுமையான உபவாசம் இல்லாமல் கூட, ஒரு குறிப்பிட்ட காலத்தில் பயனடைவார்கள் என்றும் நாம் நம்புகிறோம். ஆனால் உபவாசம் மனிதர்களால் காணப்படவும் அறியப்படவும் வேண்டும். நம்மைப் பொருத்தவரை அது மதிப்பிற்குரியதாகவும், நம் மனதில் பக்திக்குரியதாகவும் இருக்க வேண்டும். அது பெருமைக்கும் பாசாங்குத்தனத்திற்கும் வழிநடத்தினால் உண்மையிலேயே தீமையாக இருக்கும்; சுய கட்டுப்பாட்டின் வழியில் அது நமக்கு அதிக நன்மை பயக்கும்.

---

ஏழாம் சபையின் தூதனாகிய
சகோ.C.T. **ரசல்** அவர்களின் ரீ-பிரிண்ட்ஸின் தமிழாக்கத்தை வெளியிடுகிறோம்.
வெளியிடுபவர் :
சகோ. R. **செல்வராஜ்,** சென்னை வேதமாணவர் சபை,
எண். 22, முதல் தெரு, ராஜீவ் நகர், காலடிப்பேட்டை, திருவொற்றியூர், சென்னை - 600 019.
கைபேசி : 97909 00030. மின்னஞ்சல் : mbsaselvaraj@gmail.com
Website : www.thestudiesinthescriptures. com
**FOR PRIVATE CIRCULATION ONLY**